வெற்றி என்பது
உள்ளங்களை
வெற்றி கொள்வதே!
பக்கம் 3

அமெரிக்க பொய்வாதி
அலெக்ஸாண்டர் டூயியின்
பரிதாபகர முடிவு ஓர்
இறைஅடையாளம்
பக்கம் 7

லஜ்னா இமாயில்லாஹ்
ஆண்டு மாநாடு
U.K. 2022
பக்கம் 13

ஹஸ்ரத் அஹ்மது (அலை)
அவர்களின் வாழ்க்கை வரலாறு
(தொடர்-10)
பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | October 2022 | Issue No. 11



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்....) அவர்கள்
அமெரிக்காவிலுள்ள சீயோனில் 30.09.2022 அன்று
“ஃபத்ஹே அஸீம்” (மகத்தான வெற்றி) பள்ளிவாயிலை
தமது அருளுக்குரிய கரங்களால் திறந்து வைத்தார்கள்.
அல்ஹம்துலில்லாஹ்!



# திருக்குர்ஆன்

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِىْ ؕ اِنَّ اللّٰهَ قَوِىٌّ عَزِيْزٌ ○

நிச்சயமாக நானும் என் தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் மிக்கவனும் வெற்றிக்குரியவனும் ஆவான். (58:22)



# ஹதீஸ்

سَمِعَ أَبَا هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ،
عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ:
"لَا تَقُومُ السَّاعَةُ حَتَّى يَنْزِلَ فِيكُمُ
ابْنُ مَرْيَمَ حَكَمًا مُقْسِطًا، فَيَكْسِرَ الصَّلِيبَ،
وَيَقْتُلَ الْخِنْزِيرَ، وَيَضَعَ الْجِزْيَةَ،
وَيَفِيضَ الْمَالُ حَتَّى لَا يَقْبَلَهُ أَحَدٌ".

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (அழிவிற்குரிய) அந்த நேரம் வருவதற்கு முன்னர் இப்னு மர்யம் உங்களிடையே நெறிநீதி தீர்ப்பவராக இறங்குவார். அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்வார். ஜிஸ்யாவை விலக்குவார். செல்வம் எந்த அளவு அதிகரித்து விடும் எனில் எவரும் அதனைப் பெற விரும்பமாட்டார். (புகாரி எண்.2476)

# “வெற்றி என்பது உள்ளங்களை வெற்றி கொள்வதே!”




**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

## USA –ன் சீயோன் நகரில், ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் திறப்பு விழாவின் வரவேற்பு நிகழ்ச்சியில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் உரை

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அக்டோபர் 1, 2022 அன்று அமெரிக்காவில் இல்லினாய்ஸ் மாகாணத்தில் உள்ள சீயோன் நகரில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தால் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ∴பத்ஹே அஸீம் பள்ளிவாசலின் திறப்பு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினார்கள். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர்கள், நண்பர்கள், அண்டை அயலார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஹா∴பிஸ் முபாரக் கியோக்கி சாஹிப் திலாவத் ஓதினார். அதன் மொழியாக்கத்தை நஸ்ருல்லாஹ் அஹ்மத் சாஹிப் வழங்கினார். அம்ஜத் மஹ்மூத் சாஹிப் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் குறித்த அறிமுகத்தை வழங்கினார். பின்னர் பல பிரமுகர்களும், விருந்தினர்களும் வாழ்த்துரை வழங்கினர்.

சீயோன் நகரின் மேயர் ஹோனி பில்லி மெக்கின்னி தமது வாழ்த்துரையில் ஹுஸுர் அவர்களின் வருகை தமக்கு பெருமையளிப்பதாகவும், ∴பத்ஹே அஸீம் பள்ளிவாசல் சீயோன் நகரில் மார்க்கங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பெரிதும் பாடுபடும் என்று தாம் நம்புவதாகவும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 'எல்லாரிடமும் அன்பு, எவரிடமும் வெறுப்பு இல்லை' என்ற கொள்கை தமது இந்த நம்பிக்கையை வலுப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் மேயர் மாற்று மார்க்கங்களைக் குறித்த இஸ்லாத்தின் போதனைகளைப் புகழ்ந்து பேசினார்.

பின்னர் மேயர் மெக்கின்னி ஹுஸுர் அவர்களைக் கவுரவிக்கும் விதமாக சீயோன் நகரின் திறவுகோலை ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடம் வழங்கினார்.

இல்லினாய்ஸ் மாநில சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஜாய்ஸ் மெய்ஸன் உரை நிகழ்த்தும்போது ஹுஸுர் அவர்களின் வருகை முழு சீயோன் நகரத்திற்கும் ஒரு சிறப்பான தருணமாகும் என்றார். மேலும் அவர் தமது உரையில் அலெக்ஸாண்டர் டூயி சீயோன் நகரை தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டுமே உரியதாகவும் மற்றவர்களுக்கு தடுக்கப்பட்டதாகவும் மாற்ற விரும்பினார். நல்ல வேளையாக அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. ஆனால் தற்போது சீயோன் நகர் எல்லா மார்க்கங்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக விளங்குகிறது என்று கூறினார். மேலும் அவர், ஹுஸுர் அவர்கள் உலக அமைதிக்காகவும் பெண்ணுரிமைக்காகவும் ஆற்றி வரும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

மனித உரிமைகளுக்கான லேண்டோஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஸ்வெட் லேண்டோஸ் உரை நிகழ்த்தும்




போது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கும் அலெக்ஸாண்டர் டூயிக்கும் இடையிலான பிரார்த்தனைப் போட்டியைப் பற்றிக் குறிப்பிட்டார். அந்தப் பிரார்த்தனைப் போட்டியில் வெற்றி பெற்றது அஹ்மதிகள் என்றபோதிலும் உண்மையில் அது மனிதத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். ஏனெனில் அது கண்ணியம், சகிப்புத்தன்மை, சமாதானம் ஆகியவற்றின் உருவமாக விளங்கிய ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். ஹஸ்ரத் யூஸு∴ப் (அலை) அவர்களை அவர்களின் சகோதரர்கள் கைவிட்டதைக் குறித்து ஹஸ்ரத் யூஸு∴ப் (அலை) அவர்களிடம் கூறும்போது 'நீங்கள் தீங்கிற்காக இதனைச் செய்தீர்கள், இறைவன் இதனை நன்மையாக மாற்றி விட்டான்' என்பதாக கூறிய பைபிள் வசனத்தைச் சுட்டிக்காட்டி இவ்வாறே அலெக்ஸாண்டர் டூயி அந்தப் பிரார்த்தனைப் போட்டியை தீங்கிற்காக விரும்பினாலும் ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அதனை நன்மைக்குரியதாக மாற்றி விட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது தலைமையுரையில், கலந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். 'ஓர் இஸ்லாமிய அமைப்பால் நடத்தப்படும் ஒரு மார்க்க நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் பங்கு பெற்றிருப்பது உங்களுடைய திறந்த மனப்பான்மையையும் தாராள மனதையும் சகிப்புத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது' என்று கூறிய ஹுஸூர் அவர்கள் இந்தப் பள்ளிவாசலைத் திறந்து வைப்பதில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மகிழ்ச்சியடைவதாகவும் இதனை முக்கியமாகக் கருதுவதாகவும் குறிப்பிட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தைப் பொறுத்த வரை ஒரு பள்ளிவாசல் கட்டுவது இரண்டு நற்பலன்களைத் தருகின்றது. முதலாவதாக, முஸ்லிம்கள் அனைரும் இறைவணக்கத்திற்காக ஒன்று கூடுவதற்கு உதவி செய்கிறது. அதன் மூலம் முஸ்லிம்கள் எல்லாம் வல்ல இறைவனுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளையும் தமது மார்க்கக் கடமைகளையும் நிறைவேற்ற அது உதவிடுகிறது. இஸ்லாம் ஐவேளை தொழுமாறு முஸ்லிம்களுக்கு அறிவுறுத்துகிறது. ஒரு பள்ளிவாசல் கட்டுவதினால் ஏற்படும் இரண்டாவது பெரும் பயன் பொதுமக்களுக்கு இஸ்லாத்தை அறிமுகம் செய்து வைக்கவும் அதன் போதனைகளை எடுத்துக் கூறவும் உதவிடுகிறது.

பள்ளிவாசலில் தொழுபவர்கள் இஸ்லாமிய போதனைகளை அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தினால் இயல்பாகவே உள்ளூர் மக்கள் மத்தியில் இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஓர் ஆர்வம் ஏற்படும். இஸ்லாத்தைக் குறித்த அவர்களின் அறிவும் புரிதலும் அதிகரிக்கும். அவர்களுக்கு மத்தியில் சமாதானத்துடன் வாழ்ந்து வரும் முஸ்லிம்களைக் காணும்போது அவர்களிடம் இஸ்லாத்தைக் குறித்து ஏதேனும் அச்சமோ பயமோ இருப்பின் அவை அகன்று விடும் - இன்ஷா அல்லாஹ்."




இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் முழு உலகிலும் ஜமாஅத் பள்ளிவாசல்களைக் கட்டி வருவதாக ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

சிலர் அஹ்மதிகளுக்கும் மற்ற முஸ்லிம்களுக்கும் என்ன வித்தியாசம் என்று வினவுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு முன்னறிவிப்பின்படி முஸ்லிம்கள் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை இழந்து வழிதவறிச் சென்று விடுவர். அதே நேரத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இப்படிப்பட்ட ஆன்மீக வீழ்ச்சியின் காலத்தில் இஸ்லாத்தின் போதனைகளுக்கு உயிரூட்டி மறுமலர்ச்சியை ஏற்படுத்த வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஒருவர் அனுப்பப்படுவார் என்றும் அவர் முஹம்மதிய மஸீஹ் என்ற பெயரில் அழைக்கப்படுவார் என்றும் நற்செய்தி வழங்கினான். அந்த மஸீஹ் இஸ்லாத்தின் போதனைகள் அமைதி, அன்பு, நல்லிணக்கம் ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது என்று அறிவிப்பார். அவர் மக்கள் அனைவரும் அவர்கள் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் சமாதானத்துடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்றும், பரஸ்பர அன்பு நேசத்தின் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்திக் கூறுவார்.

ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அதன் அசல் வடிவில் வழங்கிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களே அந்த மஸீஹ் என்பது அஹ்மதி முஸ்லிம்களின் உறுதியான நம்பிக்கையாகும். "உண்மையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மஸீஹான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஆன்மீக அடிச்சுவட்டுகளைப் பின்பற்றியவாறு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துக் கூறுவதற்காகவே தாம் தோன்றியிருப்பதாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை)




அவர்களைப் போன்று மனித குலத்தின் மீது கருணையும் பரிவும் கொண்டார்கள். அவர்களது ஒவ்வொரு சொல்லும் செயலும் சமாதானத்திற்காகவும் சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவுமே இருந்தது."

"அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு இஸ்லாம் என்ற சொல்லின் பொருளே அமைதி மற்றும் பாதுகாப்பு என்பதுதான் என்பதை நினைவூட்டினார்கள்."

ஹுஸூர் அவர்கள் ஆரம்பகால இஸ்லாத்தில் நடைபெற்ற போர்கள் எல்லாம் தற்காப்பிற்காக நடந்த போர்களே என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலோ நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலத்திலோ ஒருமுறை கூட அநீதியாக போர் புரியப்படவில்லை என்றும் கூறினார்கள்.

"அரசியல் ரீதியிலான போர்கள் உலகில் அழிவையும் நாசத்தையும் ஏற்படுத்தி வருகின்ற இந்த நவீன காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மார்க்கப் போர்கள் முடிவுக்கு வந்து விட்டதாக கூறினார்கள். எனவே முஸ்லிம்களோ அல்லது வேறு எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களோ மார்க்கத்தின் பெயரில் போரில் ஈடுபடுவதற்கு எந்த நியாயமுமில்லை."

"எனவே, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாத்தின் நோக்கம் நிலப்பகுதிகளை வெற்றி கொள்வதோ, பிரதேசங்களை அபகரிப்பதோ, நகரங்களை வீழ்த்துவதோ அல்லது நாடுகளை முறியடிப்பதோ அல்ல என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்."

"மேலும் எங்களது கொள்கைகளையும் போதனை -களையும் ஏற்றுக்கொண்ட மக்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளிலும் கூட அரசியல் சக்தியையோ அல்லது உலகச் செல்வாக்கையோ பெற்றிட வேண்டும் என்பதும் எங்களது விருப்பம் அல்ல."

"எங்களது ஒரே விருப்பமும் நோக்கமும் மனிதகுலத்தின் உள்ளங்களை நேசத்தினால் வெற்றி கொண்டு மக்களை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதாகும்....

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கவிதையில் கூறுகிறார்கள்:

எந்த ஒரு நாட்டைக் கொண்டும் நான் என்ன செய்ய முடியும்? ஏனெனில் எனது நாடு மற்ற அனைத்து நாடுகளையும் விட வித்தியாசமானது!

எந்த ஒரு மகுடத்தைக் கொண்டும் நான் என்ன செய்ய முடியும்?

ஏனெனில் எனது மகுடம் எனது அன்பிற்குரியவனின் மகிழ்ச்சியில் உள்ளது."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: "இந்தக் கவிதையில் கூறப்பட்டபடியே அஹ்மதிய்யா ஜமாஅத் என்றுமே உலக ஆட்சியையோ அல்லது அதிகாரத்தையோ விரும்பவில்லை."

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

"அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் என்றுமே வன்முறையின் பக்கம் செல்வதில்லை. அதன் வரலாறு இதனை நிரூபிக்கிறது."

ஹுஸூர் அவர்கள் இஸ்லாத்தின் மீது சார்லஸ் மன்னன் கொண்டிருக்கும் மதிப்பு குறித்தும் ஒரு மார்க்கத்தை அல்ல, எல்லா மார்க்கங்களையும் பாதுகாப்பவராக இருக்க தாம் விரும்புவதாகவும் குறிப்பிட்டதைப் புகழ்ந்து கூறினார்கள். மேலும் அமெரிக்க அரசு மார்க்க சுதந்திரத்திற்கான சர்வதேச அமைப்பு ஒன்றை நிறுவியதைக் குறித்தும் சர்வதேச மார்க்க சுதந்திரத்தைப் போற்றுவதற்காக ஓர் உலக மாநாடு நடத்தியதற்கும் அமெரிக்க அரசை தாம் ஏற்கனவே பாராட்டியதையும் குறிப்பிட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் திருக்குர்ஆன் சூரா அல்ஹஜ் வசனம் 41 -ஐ குறிப்பிட்டுக் கூறினார்கள்.

"எங்களின் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்கவில்லையாயின், கோயில்களும், ஆலயங்களும், மடங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாகக் கூறப்படும் பள்ளிவாயில்களும் தரை மட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு(டைய





மார்க்கத்து)க்கு உதவுபவர்-களுக்கு நிச்சயமாக உதவு-வான். நிச்சயமாக அல்லாஹ் சக்திவாய்ந்தோனும் மிகைத்-தோனும் ஆவான்" (22-41)

எல்லா மார்க்கங்களைச் சேர்ந்த மக்களுக்கும் முழுமை-யான மார்க்க சுதந்திரத்தை வழங்குகின்ற ஒரே வேதநூல் திருக்குர்ஆனே ஆகும். மேலும் அது முஸ்லிம்களிடமும் பள்ளிவாசலுக்குள் செல்பவர்-களிடமும் மாற்று மார்க்கங்களைச் சேர்ந்தவர்களின் மார்க்க உரிமைகளைப் பாதுகாக்குமாறு கூறுகிறது.

இந்தத் தூய இஸ்லாமிய போதனைகளையே உலகில் எல்லாப் பக்கமும் பரவச் செய்ய நாங்கள் முயற்சிக்கிறோம்.

ஹுஸூர் அவர்கள் அலெக்ஸாண்டர் டுயிக்கும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த பிரார்த்தனைப் போட்டி (முபாஹலா) குறித்தும் கூறினார்கள். சிலர் ஹஸ்ரத் குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் டுயியைக் குறித்து கடுமையான சொற்கள் பயன்படுத்தியிருப்பதைக் குறித்து கேள்வி எழுப்பலாம். ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களுக்கும் அன்னாரது அமைதி நிறைந்த போதனைகளுக்குமிடையில் எந்த முரண்பாடும் இல்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வன்முறையின் எந்த வடிவத்தையும் கையாளவில்லை. மாறாக, மேலும் குழப்பம் பரவி விடாமல் இருப்பதற்காக டுயிவின் கடுஞ்சொற்களை மிகுந்த ஞானத்துடன் அணுகினார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கண்ணியமிக்க முறையில் அவருக்குப் புரிய வைக்க விரும்பினார்கள். நிதானாத்தைக் கையாளுமாறும், முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்குமாறும் கூறினார்கள். இதற்கு நேர்மாறாக டுயி இஸ்லாத்திற்கு எதிராக மோதல் போக்கை கையாண்டதுடன் தனது ஆசையை வெளிப்படையாகவும் கூறினார். உதாரணமாக, டுயி எழுதினார்: இஸ்லாம் உலகிலிருந்து விரைவில் மறைந்து விட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இறைவா! எனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக. இறைவா! இஸ்லாத்தை அழித்து விடுவாயாக....

முஸ்லிம்கள் கிறித்தவத்தை ஏற்றுக் கொள்ளா விட்டால் அவர்கள் அழிவையும் மரணத்தையும் சந்திக்க நேரிடும் என்று டுயி எழுதினார். இந்த வெறுப்புணர்வினால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு விடும் சாத்தியம் இருந்ததனால் அவ்வாறு நடந்து விடக் கூடாது என்பதற்காகவும் சூழ்நிலையின் தாக்கத்தை தளர்த்துவதற்-காகவும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிறுவுனர் விரும்பினார்கள். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சூழ்நிலையின் தாக்கத்தைத் தளர்த்துவதற்காக அவரை முபாஹலாவுக்கு அழைத்தார்கள்.

இது உண்மையை தீர்மானிப்பதற்கான சரியான பொருத்தமான வழிமுறையாகும். இது அதிகமான ஆத்திரமூட்டலுக்கும் பகைமைக்கும் மத்தியில் கட்டுப்பாட்டை மேற்கொண்டதற்கான மிக அழகிய உதாரணமாகும் என்று கூறினால் அது மிகையல்ல.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) தொடர்ந்து எவ்வாறு டுயியின் ஆத்திரமூட்டலும் வெறுப்பும் அவரது அழிவிற்கு காரணமாயிற்று என்பதைக் குறித்தும் எவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் விளக்கினார்கள்.

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

மனித குலத்தை ஆன்மீக இரட்சிப்பின் பக்கம் வழிநடத்துவதும் ஜாதி, இன, நிற பேதமின்றி நல்லிணக்கம், உண்மையான அமைதி மற்றும் பாதுகாப்புடனும் அனைத்து மக்களும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதுவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலையாய குறிக்கோளாகும்.

எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நான் துஆ செய்கிறேன். இந்தப் பள்ளிவாசல் அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் மனித குலத்தின் மீதான நேசத்தின் ஒளிவிளக்காக திகழட்டுமாக! மக்கள் தாழ்மையுடன் கூடும் இடமாக இது திகழட்டுமாக! மக்கள் அவர்களைப் படைத்தவனை அறிந்து கொள்ளட்டுமாக! அவர்கள் அவன் முன் குனியவும் மனித குலத்தின் உரிமைகளை நிறைவேற்றுபவர்களாகவும் ஆகட்டுமாக! ஏனெனில் இறைவனை வணங்குவதற்குரிய உரிமைகளையும் மனித குலத்திற்கான உரிமைகளையும் செலுத்தும்போதுதான் நாம் வெற்றி பெறுபவர்களாவோம் என்பது எமது நம்பிக்கையாகும்.

ஹுஸூர் அவர்கள் அனைத்து பிரமுகர்களுக்கும் குறிப்பாக சீயோன் நகரத்து திறவுகோலை வழங்கிய மேயருக்கும் நன்றி கூறினார்கள். இந்த நகரத்தின் சாவி இப்போது பாதுகாப்பான கைகளில் உள்ளது என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்களின் துஆவுடன் வரவேற்பு நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

(நன்றி: அல்ஹகம் 02.10.2022)



# அமெரிக்க பொய்வாதி அலெக்ஸாண்டர் டூயியின் பரிதாபகர முடிவு 'ஓர் இறைஅடையாளம்'

அபூ அப்துல்லாஹ்


அலெக்ஸாண்டர் டூயியின் முடிவு கிறித்தவர்களுக்கு பொதுவாகவும் அமெரிக்கர்களுக்கும் மேற்கத்திய உலகுக்குக் குறிப்பாகவும் ஓர் அடையாளமாகும். ஸ்காட்லாந்தில் பிறந்த டூயி அமரிக்க குடியுரிமை பெற்று 1892 -ல் தமது பிரச்சாரப் பணியைத் தொடங்கினார். அற்புத சுகமளிப்பவராக பிரபலமான டூயியைச் சுற்றி மக்கள் கூட்டம் கூடியது. 1901 ஆம் ஆண்டு டூயி இயேசுவின் இரண்டாவது வருகைக்கு முன்பாக இறைவன் தன்னை எலியாவாக அனுப்பியுள்ளதாக வாதித்தார். எவ்வாறு இயேசுவின் முதல் வருகைக்கு சற்று முன்பாக எலியா அனுப்பப்பட்டாரோ அதைப்போன்று இரண்டாம் வருகையின் எலியாவாக தாமே தோன்றியிருப்பதாக அவர் வாதிட்டார்.

இயேசுவின் வருகையை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அந்த நேரத்தில் அவரது இந்த வாதத்தினால் அவரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமானது. அவர் ஓர் இடத்தை விலைக்கு வாங்கினார் அந்த இடத்தில்தான் இயேசு இறங்கப்போவதாக அறிவித்தார். மக்கள் ஆர்வத்துடன் அங்கு நிலம் வாங்கி வீடுகளைக் கட்ட அது ஒரு நகரமாக மாறியது. டூயி அதனை சீயோன் நகரம் என அழைத்தார். அந்த நகரை டூயி ஒரு முடிசூடா மன்னராக ஆண்டு வந்தார். விரைவிலேயே அவரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியது. அவர் தமது 'ஊழியக்கார்களை' கிறத்தவ நாடுகளுக்கு பிரச்சாரத்திற்காக அனுப்பி வைத்தார்.

இஸ்லாத்தின் மீது கடுமையாக பகையுணர்வு கொண்டிருந்த டூயி அதனைப் பழித்துப் பேசிவந்தார். 1902 -ல் முஸ்லிம்கள் கிறித்தவர்களாக மாறாவிட்டால் அவர்கள் மீது அழிவு விதிக்கப்பட்டுள்ளது என்று முன்னறிவிப்பு செய்தார்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் அதற்கான பதிலை ஒரு பிரசுரமாக வெளியிட்டார்கள். அதில் டூயி உலக முஸ்லிம்களின் அழிவைக் குறித்து முன்னறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், தாம் இறைவன் புறமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹாக வந்திருப்பதால் டூயி தன்னுடன் ஒரு பிரார்த்தைனைப் போட்டிக்கு முன்வர வேண்டும் என்றும், அதன் முடிவை உலகம் அறிந்து கொள்ளும் என்றும் அறிவித்திருந்தார்கள்.

இந்தப் பிரசுரம் செப்டம்பர் 1902 -ல் வெளியிடப்பட்டது. டூயியின் பிரபலத்தின் காரணத்தால் இந்தப் பிரசுரம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பத்திரிக்கைகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. டிசம்பர் 1902 முதல் டிசம்பர் 1903 வரை அமெரிக்காவிலும் ஐரொப்பாவிலும் ஏராளமான பத்திரிகைகள் இது குறித்துப் பேசின. அந்தப் பிரசுரத்தை வெளியிட்ட சுமார் 40 பத்திரிகைகள் தமது நகலை காதியானுக்கும் அனுப்பி இருந்தன.



அலெக்ஸாண்டர் டூயி
1847 - 1907

இந்த விளம்பரத்தின் விளைவாக சுமார் 25 இலட்சம் மக்கள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் பிரார்த்தனைப் போட்டிக்கான சவாலைக் குறித்து அறிந்தனர்.

டூயி இந்தப் பிரசுரத்திற்கு எந்தப் பதிலையும் தரவில்லை. ஆனால் இஸ்லாத்தைத் தாக்கிப் பேசுவதில் மேலும் முனைப்பு காட்டினார். தன்னுடைய Leaves of Healing என்ற பத்திரிகையில் 14 பிப்ரவரி 1903 -ல் எழுதியிருந்தார். அதில் 'நான் இறைவனிடம் இஸ்லாத்தை விரைவில் உலகத்தை விட்டும் அகற்றும்படி பிரார்த்திக்கின்றேன். இறைவா! எனது இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக, இஸ்லாத்தை விரைவில் அழித்து விடுவாயாக! என்று எழுதியிருந்தார். மீண்டும் 5 ஆகஸ்டு 1903 -ல் சீயோனின் கைகளில் இஸ்லாத்தின் முடிவு ஏற்படும் என்று எழுதியிருந்தார்.

# டூயீயின் அழிவு பற்றிய முன்னறிவிப்பு (1903)

டூயி பிரார்த்தனைப் போட்டிக்கு எந்தப் பதிலும் தராமல் எதிர்ப்பில் மேலும் முன்னேறினார்...

**இறைவா! இஸ்லாத்தை விரைவில் அழித்து விடு** என பிரார்த்தனை செய்திருப்பதாக அறிவித்தார்.

(Leaves of Healing பிப்ரவரி 14, 1903)

சீயோனின் கைகளில் இஸ்லாத்தின் முடிவு ஏற்படும் என அறிவித்தார்.

(Leaves of Healing ஆகஸ்டு 5, 1903)

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1903 -ல் வெளியிட்ட இரண்டாவது பிரசுரத்தில்..... டூயி எவ்வளவுதான் மரணத்தை விட்டு தப்பியோட நினைத்தாலும் துக்கமும் வேதனையும் நிறைந்த மரணம் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியை விட்டு வெருண்டோடுவதால் அவர் அந்த மரணத்தை விட்டும் தப்பிக்க முடியாது. டூயியின் சீயோனுக்கு அழிவு விதிக்கப்பட்டுள்ளது. அவர் இந்தப் போட்டியை ஏற்றாலும் மறுத்தாலும் சரியே!**

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட இவ்விரண்டு பிரசுரங்களிலும் டூயியின் அழிவைப் பற்றிய முன்னறிவிப்புடன் அன்னார் தமது வருகையின் நோக்கங்களையும் அதற்கான ஆதாரங்களையும் தந்திருந்தார்கள். அமெரிக்கா, பிரிட்டனின் முன்னணிப் பத்திரிகைகள் இந்தப் பிரசுரங்களை முக்கியத்துவம் தந்து வெளியிட்டன.




# டூயீயின் வீழ்ச்சியும் அழிவும்

இந்தியாவிலிருந்து ஒரு முகமதிய மெசாயா, இயேசு கிறிஸ்து காஷ்மீரில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்று மீண்டும் மீண்டும் கடிதம் எழுதி வருகிறார். நான் அவருக்கு ஏன் பதில் கூறுவதில்லை என்று மக்கள் கேட்கின்றனர். நான் இது போன்ற ஈக்களுக்கு பதில் தருவேன் என நீங்கள் நினைக்கிறீர்களா? நான் அவற்றின் மீது எனது காலை வைத்தால் அவற்றின் வாழ்வு அழிந்து போய் விடும்; பிழைத்துப் போகட்டும் என விட்டு வைத்துள்ளேன்.

1. 1906 -ல் புகழின் உச்சியில் இருந்த டூயிக்கு திடீரென பக்கவாதம் ஏற்பட்டது.
2. எந்தக் காலைக் கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நசுக்கி விடுவேன் என்று கூறினாரோ அந்தக் கால் முற்றிலும் செயலிழந்து விட்டது.
3. புகைபிடிப்பதைக் கூட தன்னைப் பின்பற்றுபவர்களிடம் தடுத்த டூயியின் வீட்டில், உயர்ரக மது பாட்டில்கள் இருந்தன. தனிமையில் அவர் ஒரு பெரும் குடிகாரர் என்பதை அவரது மனைவியும் மகனும் வெளிப்படையாகக் கூறினர்.
4. பல பெண்களுடன் தவறான தொடர்பு இருந்தது வெளிச்சத்திற்கு வந்தது. அவரைப் பின்பற்றியவர்கள் விலகினர்.
5. பல இலட்சம் டாலர் பணம் கையாடல் செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டார்.
6. அவரது சீயோனை விட்டும் அவர் வெளியேற்றப்பட்டார்.
7. நிற்க இயலாத அவரை வேலையாட்கள் தூக்கிச் சென்றனர்.
8. வேதனையிலும் துக்கத்திலும் மார்ச் 8, 1907 -ல் மரணித்தார்.
9. இறுதி நாட்களில் அவருடன் இருந்தவர்கள் வெறும் 4 பேர். அவரது மொத்த சொத்து மதிப்பு 30 ரூபாய். அவரது மரண சடங்கில் தந்தை, மனைவி, மகன் கலந்து கொள்ளவில்லை.


## அலெக்ஸாண்டர் டூயி
## - பொய்வாதியின் பரிதாபகரமான முடிவு -



அலெக்ஸாண்டர் டூயி
(1847 - 1907)

இயேசுவின் இரண்டாவது வருகைக்கு முன்னர் இறைவன் தன்னை எலியாவாக அனுப்பியுள்ளதாக 1901 -ல் வாதிட்டவர்

“டூயியுடன் ஒப்பிடும்போது பொய்வாதிகளான முஸைலமாவும் அஸ்வதும் மிகச் சாதாரணமானவர்களே! ஈஸப்னு மர்யம் பன்றியைக் கொல்வார் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பில் கூறப்பட்ட பன்றி இந்த மனிதனே என்று இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும்....”
(ஹகீகத்துல் வஹீ ஆங்கில பதிப்பு பக்கம் 644)



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
(1835 - 1908)

டூயி தனது பகைமையில் முன்னேறிச் செல்வதைக் கண்ட ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் 1903 -ல் மற்றொரு பிரசுரம் வெளியிட்டார்கள். அது ‘டூயி மற்றும் பிகட்டை குறித்த முன்னறிவிப்புகள்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. பிகட் என்னும் இஸ்லாத்தின் எதிரி இங்கிலாந்தைச் சேர்ந்தவராவார். அந்தப் பிரசுரத்தில் ஓரிறைக் கொள்கையை உலகில் நிலைநாட்டுவதற்காகவே தாம் அனுப்பப்பட்டிருப்பதாகவும். அமெரிக்க மக்களுக்க்கு தமது உண்மைக்கான ஓர் அடையாளத்தைக் காட்ட விரும்புவதாகவும் கூறியிருந்தார்கள்.

அடையாளம் என்னவெனில் டூயி தன்னுடன் பிரார்த்தனை போட்டிக்கு வந்தால் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த சவாலை ஏற்றுக் கொண்டால் தனது வாழ்நாளிலேயே டூயி மிகுந்த துயரத்துடனும் வேதனையுடனும் மரணித்து விடுவார் என்று கூறியிருந்தார்கள். மேலும் டூயிக்கு ஏற்கனவே இந்த சவால் தரப்பட்டதாகவும் டூயி அதனை ஏற்று கொள்ளவில்லை என்றும், மேலும் அவருக்கு 7 மாத கால அவகாசம் தரப்படுவதாகவும் இந்தக் காலகட்டத்திற்குள் டூயி தமது பதிலைத் தர வேண்டுமெனவும் கூறியிருந்தார்கள். மேலும் அந்தப் பிரசுரத்தின் இறுதிப் பகுதியில் டூயியின் சீயோனுக்கு அழிவு விதிக்கப்பட்டுள்ளது என்றும், இறைவா! நீ பிகட், டூயியின் ஏமாற்றுத்தனத்தை மக்களுக்கு வெளிப்படச் செய்வாயாக என்றும் எழுதியிருந்தார்கள்.

இந்தப் பிரசுரமும், அமெரிக்காவிலும் ஐரோப்பவிலும் மிகப் பரந்த அளவில் வெளியிடப்பட்டது நாளிதழ்களும் பத்திரிகைகளும் இது குறித்து செய்திகள் வெளியிட்டன. பிரிட்டனின் கிளாஸ்கோ ஹெரால்ட், அமெரிக்காவின் நியுயார்க் கமர்சியல் அட்வடைஸர் போன்ற பத்திரிகைகள் இந்தப் பிரார்த்தனைப் போட்டியின் சுருக்கத்தை வெளியிட்டன. இதன் மூலம் சமார் 25 இலட்சம் மக்கள் வரை இந்தச் செய்தி சேர்ந்தது.

இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டபோது டூயியின் புகழ் உச்சத்தில் இருந்தது. அவரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது. பணம் படைத்த அவர்களிடமிருந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான டாலர்களை டூயி பரிசாக பெற்று வந்தார். டூயிக்கு பல தொழில் நிறுவனங்களும் இருந்தன. அவரது வங்கி இருப்புத் தொகை 20 மில்லியன் டாலர்களாக இருந்தது. இவர் மிகச் சிறந்த ஆரோக்கியத்தில் இருந்தார். தொடுதல் மூலம் ஆரோக்கியம் கிடைப்பது தனது சிறப்பான அற்புதம் என்று அவர் கூறி வந்தார். டூயிக்கு பணம், பக்தர் கூட்டம், ஆரோக்கியம், செல்வாக்கு ஆகியன எல்லாம் பெருமளவு இருந்தது.

இரண்டாவது பிரசுரம் வெளிடப்பட்ட போது மக்கள் அவரிடம் அவர் ஏன் பதில் கூறவில்லை எனக் கேட்டனர். அதற்கு அவர் “இந்தியாவிலிருந்து ஒரு முகமதிய மெசாயா இயேசு கிறிஸ்து காஷ்மீரில் அடங்கப்பட்டிருக்கிறார் என்று மீண்டும் மீண்டும் கடிதம் எழுதி வருகிறார். நான் அவருக்கு ஏன் பதில் கூறுவதில்லை? என மக்கள் கேட்கின்றனர். நான் இதுபோன்ற ஈக்களுக்கு பதில் தருவேன் என நீங்கள் நினைக்கிறீர்களா! நான் அவற்றின் மீது எனது காலை வைத்தால் அவற்றின் வாழ்வு அழிந்து போய்விடும். பிழைத்துப் போகட்டும் என விட்டு வைத்துள்ளேன்” என்று கூறினார்.

இவ்வாறு கூறியதன் மூலம் அதுவரை போட்டியை ஏற்றுக் கொள்ளாமலிருந்த டூயி முட்டாள்தனமாக போட்டியில் நுழைந்தவராகி விட்டார். டூயி நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தப் போட்டியில் நுழைந்தாலும் தனது வாழ்நாளிலேயே அவர் மிகுந்த துக்கத்துடனும் வேதனையுடனும் உலகை விட்டுச் செல்வார் என்று ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் (அலை) அவர்கள் கூறியதை அவர் மறந்து விட்டார். டூயி ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் (அலை) அவர்களை ஒரு ஈ என்றும், தன்னால் அதனை நசுக்க முடியும் என்றும் கூறியதிலிருந்து இந்தப் போட்டியில் நுழைந்து இறை தண்டனையை வரவழைத்துக் கொண்டார்.

டூயியின் பெருமையும் அகங்காரமும் மேலும் வளர்ந்தது. சில நாட்களுக்குப் பிறகு டூயி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை மீண்டும் ‘முட்டாள் முகமதிய மெசாயா என்றும், நான் இவ்வுலகில் இறைத்தூதர் இல்லை எனில் வேறு எவரும் இருக்க முடியாது’ என்றும் கூறினார். டிசம்பர் 1903 -ல் அவர் வெளிப்படையாகவே போட்டியில் பங்கு பெற்றார். அவரது எதிரிகள் மீது அவர் வெற்றி பெறுவார் என்று ஒரு வானவர் தம்மிடம் கூறியதாக அவர் அறிவித்தார். இந்த அறிவிப்பு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களுக்கு எதிரான ஒரு முன்னறிவிப்பாக இருந்தது. இவ்வாறு அந்த ஆன்மீகப் போட்டி படிப்படியாக உருவம் பெற்று வெளிப்படையானதாக மாறிவிட்டது. அவரது இந்தக் கடைசி அறிவிப்பிற்குப் பிறகு ஹஸ்ரத் மிர்ஸா குலாம்

அஹ்மத் (அலை) அவர்கள் இவ்விஷயம் குறித்து எதுவும் எழுதவில்லை. திருக்குர்ஆனின் 'நீர் எதிர்பார்த்திருப்பீராக, அவர்களும் எதிர்பார்திருப்பார்கள்' என்ற வசனத்திற்கேற்ப விவகாரத்தை இறைவனிடம் விட்டு விட்டார்கள்..

இறைவனின் பிடி இறுகத் தொடங்கியது. எந்தக் காலைக் கொண்டு இறைவனின் மஸீஹை நசுக்கி விடுவேன் என்று கூறினாரோ அந்தக் கால் செயலிழந்து விட்டது. அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. தரையில் நிற்க முடியாத நிலையில் தனது பணிகளை ஒரு சீடரிடம் ஒப்படைத்து விட்டு பக்கவாதத்திலிருந்து குணம் பெறுவதற்காக அதற்கேற்ற சூழலைக் கொண்ட ஒரு தீவு நோக்கி புறப்பட்டார். ஆனால் இறைவனின் கோபமும் அவரைப் பின்தொடர்ந்தது.

இறைவனின் மஸீஹை அவர் புழு என கூறினார். இப்போது அவரே புழு போன்று ஆகிவிட்டார். அவர் பெரிதும் பீற்றி வந்த அற்புத சிகிச்சையும் ஆனந்த ஆரோக்கியமும் அவரை விட்டும் நீங்கியது. அவர் வீட்டை விட்டுச் சென்ற பின்னர் அவரைப் பின்பற்றியவர்கள் வியந்தனர். பிறருக்கு 'அற்புத சிகிச்சை' அளிக்கும் டூயி தனக்குத்தானே குணமளிக் முடியாமல் போனது ஏன்? அவருக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது?

அவரது வீட்டிற்கு இதுவரை செல்ல முடியாத அவர்கள் தற்செயலாக அவரது வீட்டை சோதனையிட்டபோது அங்கு உயர் ரக மதுபாட்டில்கள் இருப்பதைக் கண்டனர். அவரது மனைவியும் மகனும் டூயி தம்மை பின்பற்றுபவர்களிடம் மது அருந்தக் கூடாது எனக் கூறினாலும் இரகசியமாக அவர் அதிகம் குடிப்பவர் எனக் கூறினர். அவரது மனைவியோ தான் அவரிடம் விசுவாசத்துடனே நடந்து கொண்டதாகவும், அவரோ பணக்கார பெண் ஒருத்தியை மணப்பதற்கு திட்டமிடுவதாகவும் கூறி அந்தப் பெண் டூயிக்கு எழுதிய கடிதங்களையும் காட்டினார். இதற்காகவே பலதாரமணம் கூடாது எனக் கூறி வந்த டூயி இந்தச் சட்டத்தைத் தற்போது திருத்தியமைக்க இதுவே காரணம் என்றும் அவர் கூறினார். இதைக் கேட்டு அதிர்ந்துபோன அவரது சஹாக்கள் அவரது வங்கி இருப்பை சோதனையிட்டனர். அப்போது அவர் பல இலட்சம் டாலர் முறைகேடு பண்ணியிருப்பது தெரிய வந்தது. மேலும் நகரில் உள்ள இளம் பெண்களுக்கு அதிகமாக பரிசுத் தொகைகளை வழங்கியிருப்பதும் தெரிய வந்தது.

இந்த விஷயங்கள் வெளிச்சத்திற்கு வந்ததும் அவரது முன்னணி சஹாக்கள் அவரைக் கைகழுவி விட முடிவு செய்தனர். அவர்கள் அவருக்கு அனுப்பிய டெலிகிராமில் 'உமது ஊதாரித்தனமான செலவினங்களையும், இரட்டை வேடத்தையும், முரண்பாடுகளையும், மிகைப்படுத்தல் -களையும், ஒழுக்கம் கெட்ட தனத்தையும் இந்த அமைப்பு ஏகமனதாக கண்டிக்கிறது. எனவே உமது பதவியிலிருந்து நீர் தள்ளப்படுகிறீர்' என்று குறிப்பிட்டிருந்தனர்.

டூயியால் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்க முடியவில்லை. இறுதியில் அவரது அனைத்து சஹாக்களும் அவரை விட்டு விலகினர். ஓர் இறுதி முயற்சியாக டூயி தமது பின்பற்றுபவர்களையெல்லாம் ஒன்றுகூட்டி அவர்களிடம் உரையாற்றி அவர்களை தம் பக்கம் இழுக்க முயற்சி செய்தார். இதற்காக அவர் இரயிலில் வந்திறங்கியபோது அவரை வரவேற்க வெகு சிலரே வந்திருந்தனர். அவரை எவருமே கவனிக்கவில்லை.

## டூயியின் சீயோன்




சீயோன் நகரம் புனிதமானது. புகை பிடிக்கக் கூட அனுமதி இல்லை என நுழைவாயிலில் வைக்கப்பட்ட அறிவிப்பு

**ஸ்காட்லாந்தில் பிறந்து அமெரிக்க குடியுரிமை பெற்ற டூயி 1892 -ல் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். அற்புத சுகமளிக்கும் ஆற்றல் தமக்கு இருப்பதாகக் கூறி மக்களைச் சேர்த்தார். ஒரு நிலத்தை வாங்கி அதற்கு சீயோன் எனப் பெயரிட்டார். அங்குதான் இயேசு இறங்க இருப்பதாக அறிவித்தார். அவரது அறிவிப்பைக் கேட்ட மக்கள் போட்டி போட்டுக் கொண்டு வீடுகளைக் கட்டினர். பெரும் பணம் படைத்த பலர் டூயி -ஐப் பின்பற்ற விரைவில் சீயோன் பெருநகரமாக மாறியது.**



சீயோன் நகர ஆடம்பர ஹோட்டல்

நீதிமன்றங்களுக்குச் சென்றார். அங்கும் அவருக்கு உதவி கிடைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது பக்கவாத நோய் அவரை முற்றிலும உதவியற்றவராக ஆக்கி விட்டது. அவரது வேலையாட்கள் அவரை ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குத் தூக்கிச் சென்றனர். அவர் மிகவும் துக்கத்திலும் வேதனையிலும் வாழ்ந்து வந்தார். அவரது சில நண்பர்கள் இந்தக் கடைசி நாட்களில் அவரை சந்தித்து வந்தனர். அவர்கள் அவரது நோயிற்கு முறையான சிகிச்சை எடுத்துக்கொள்ளுமாறு கூறியதற்கு அவர் மறுத்து விட்டார். நோய்க்கு சிகிச்சை எடுத்து கொள்ளக் கூடாது என்று பிறருக்குப் போதித்த அவர் தனக்கு எவ்வாறு எடுத்துக் கொள்வார்?

ஒரு இலட்சம் பேராயிருந்த அவரைப் பின்பற்றியவர்கள் 200 பேராகி விட்டனர். நீதிமன்றங்களிலும் அவருக்குத் தோல்வியே ஏற்பட்டது. தொடர்ந்து வந்த துன்பங்களைத் தாங்க முடியாமல் அவர் சுய புத்தியை இழந்து பைத்தியமாகி விட்டார். இந்த நிலையில் ஒருமுறை அவரை கம்பீரமான தோற்றத்துடன் எலியாவாக பார்த்திருந்த அவரது சில சீடர்களிடம் தனது பெயர் ஜெர்ரி என்றும், முந்தைய இரவு ஷய்த்தானுடன் போர் புரிந்ததாகவும் அப்போரில் தமது தளபதி கொல்லப்பட்டதாகவும் தமக்குக் காயம் ஏற்பட்டது என்றும் உளறினார்! அவரது சகாக்கள் அவருக்கு பைத்தியமாகி விட்டதை அறிந்து கொண்டனர். அவரது கடைசி தோழர்களும் அவரை விட்டுச் சென்றனர். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு துல்லியமாக நிறைவேறியது. அவர் வேதனையிலும் துக்கத்திலும் மார்ச் 8, 1907 -ல் மரணித்தார். அந்த இறுதி நாட்களில் அவருடன் இருந்தவர்கள் 4 பேர்! அவரிடம் இருந்த சொத்து வெறும் 30 ருபாய் மட்டுமே!


[Ref: "Invitation to Ahmadiyyat" by Hazrat Mirza Basheerudeen Mahmood Ahmad(rali)]

# சீயோனின் 'முடிசூடா மன்னர்' அலெக்ஸாண்டர் டூயி



டூயீயின் வீடு

டூயியைப் பின்பற்றியவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகமானது. சீயோனின் பல்வேறு தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. பண முதலைகளிடமிருந்து நன்கொடைகள் குவிந்தன. அவரது வங்கி இருப்பு மட்டும் 20 இலட்சம் டாலர்களாக இருந்தது. டூயி தனது பிரச்சாரகர்களை கிறித்தவ நாடுகளுக்கு அனுப்பி தனது அமைப்பைப் பலப்படுத்தினார்.




பெரிய அச்சகம்



டூயீயின் குடும்பத்தினர்




மற்றொரு ஜெபகூடம்



பிரமாண்ட ஜெபகூடம்




சீயோனின் சர்ச்




மக்கள் வெள்ளம்

# இறை அடையாளம் குறித்து பத்திரிகைகள் பேசின!

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் டூயீக்கு எதிராக முன்னறிவிப்பு செய்து 1902, 1903 -ல் வெளியிட்ட இரண்டு பிரசுரங்கள் பற்றியும், 1907 -ல் டூயியின் அழிவு பற்றியும் பிரிட்டன், அமெரிக்காவின் பல பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன. அவற்றுள் சில...

1. The Argonout, San Francisco Dec1, 1902
2 New york Times Mar 29, 1903
3. The Literary Digest Jun 20, 1903
4. The Buffalo Times Jun 25, 1903
5. The New York Mail & Express Jun 25, 1903
6. The Herald, Rochester Jun 25,1903
7. Baltimore American, Jun 25, 1903
8. The Daily Advertiser Boston, Jun 25,1903
9. Democrat and Chroniclae Jun 25, 1903
10. The Albany Express, Jun 25, 1903
11. The Record Boston, Jun 27, 1903
12. Desrt English Jun 27, 1903
13. The Pilot - Boston,





GREAT IS MIRZA GHULAM AHMAD - THE MESSIAH

Great Is Mirza Ghulam Ahmad The Messiah

FORETOLD PATHETIC END OF DOWIE AND NOW HE PREDICTS PLAGUE, FLOOD AND EARTHQUAKE


Sunday Herald ஜூன் 23, 1907 -ல் வெளியிட்ட விரிவான செய்தி

14. The Pathfinder - Washington Jun 27, 1903
15. Chicago Evening American Mar 9 ,1907
16. The New York Times Mar 10, 1907
17. The Chicago Tribune Mar 10, 1907
18. The Times, London Mar 11, 1907
19. The Dunville Gazette Jun7, 1907
20. The Truth Seeker, New York Jun 15, 1907
21. The Sunday Herald, Boston Jun23, 1907

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1902 -ல் துவங்கிய 'The Review of Religions' ஆங்கிலப் பத்திரிகை 100 ஆண்டுகளைக் கடந்து இன்று வரை வெளி வந்து கொண்டிருக்கிறது!




அமெரிக்க பொய்வாதி டூயியின் பத்திரிகை Lieves of Healing அவருடன் மறைந்து போனது







'டூயியின் இறங்கு முகம்' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்ட ஜூலை 1906 –ன் ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் மற்றும் ஆகஸ்டு 2022 –ன் ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் மாத இதழ்

# லஜ்னா இமாயில்லாஹ் ஆண்டு மாநாடு - U.K.-2022

## ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

தஷஹ்ஹுது தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:




கோவிடால் பாதிக்கப்பட்ட கடந்த சில வருடங்களுக்குப் பிறகு அல்லாஹ்வின் அருளால் லஜ்னா இமாயில்லாஹ் யு.கே தமது இஜ்திமாவை பெரிய அளவில் நடத்துதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றனர். நீங்கள் இஜ்திமா -வின் பல்வேறு நிகழ்ச்சிகளிலிருந்து பெரிதும் பயன் பெற்றிருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்; மேலும் துஆ செய்கின்றேன்.

லஜ்னா இமாயில்லாஹ்வின் ஒவ்வோர் உறுப்பினரும் லஜ்னா இமாயில்லாஹ்வில் இணைந்திருப் -பதன் பொருள் என்னவென்று சிந்திக்க வேண்டும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்.


லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பினை நிறுவியபோது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பெரிதும் சிந்தனை செய்த பிறகே அதற்கு இந்தப் பெயர் வைத்தார்கள். லஜ்னா இமாயில்லாஹ் என்றால் 'அல்லாஹ்வின் பெண் சேவகர்களின் அமைப்பு' என்பதாகும். இந்தப் பெண் சேவகர்களில் ஒருவராக உறுதிமொழி எடுக்கும் போது லஜ்னா உறுப்பினர்கள் தமது பொறுப்புகள் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: எல்லா உறுப்பினர்களும் தமது மார்க்கத்தைப் பாதுகாப்பது குறித்து பெரும் கவனம் செலுத்த வேண்டும். ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் ஆன்மீக அந்தஸ்தையும் தகுதியையும் அடைவதற்கு அவர்கள் முயற்சிக்க வேண்டும்.... ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் மார்க்க அந்தஸ்து அவர் இஸ்லாத்தை வெறுமனே ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் மிக உயர்ந்ததாகும். கலிமா கூறும் எவரும் முஸ்லிமாகி விடலாம். ஆனால், அவர் ஒரு நம்பிக்கையாளர் என்றோ அல்லது அவர் உண்மையான ஈமானைப் பெற்றுக் கொண்டார் என்றோ எவரும் கூற முடியாது.

அல்லாஹ் ஒருவனே என்றும், அவன் எல்லாம் வல்லவன் என்றும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்றும், இஸ்லாம் ஒரு முழுமையான மார்க்கம் என்றும் நம்புவது ஈமானின் மிகவும் அடிப்படையான அந்தஸ்தே ஆகும். முழுமையான ஈமான் என்பது அதை விட உயர்ந்த தகுதியையும் புரிதலையும் கொண்டதாகும். ஒருவர் அல்லாஹ்வின் எல்லாக் கட்டளைகளின்படியும் செயல்படாத வரை ஒருவர் அந்தத் தகுதியை அடைய முடியாது.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் வைக்க வேண்டிய விஷயம் என்னவெனில், அவர்கள் தமது ஈமானிலும் நம்பிக்கையிலும் முழுமையைப் பெற முயற்சிக்க வேண்டும். இது குறித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நம்பிக்கை கொண்டவர்கள் யாரென்றால், அவர்களின் செயல்கள் அவர்களது ஈமானுக்கு சாட்சி பகர வேண்டும். அவர்களின் உள்ளங்களில் ஈமான் இடம்பெற்றுள்ளது. நம்பிக்கையாளர்கள் யாரென்றால் அவர்கள் தமது இறைவனுக்கும் அவனது திருப்தியைப் பெறுவதற்கும் முன்னுரிமை தருபவர்கள் ஆவர்.




எனவே, மார்க்கத்திற்கு மற்றெல்லாவற்றையும் விட முன்னுரிமை தருவது ஒரு நம்பிக்கையாளர் என்ற தகுதியைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் இன்றியமையாத அடிப்படை அம்சமாகும். நினைவில் கொள்ளுங்கள்! மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை தருவேன் என்று ஒவ்வோர் அஹ்மதியும் பைஅத் செயயும்போது உறுதிமொழி எடுக்கின்றார். இதுவே ஒவ்வொரு கிளை அமைப்புகளின் உறுதிமொழிகளிலும் இடம் பெற்றுள்ள முக்கியமான அம்சமுமாகும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளை எடுத்து வைத்தார்கள். அதில் அன்னார், நம்பிக்கையாளர்கள் இறைவனுக்காக இறையச்சத்தின் குறுகலான கடினமான பாதைகளில் நடந்து செல்பவர்கள் என்றும், அதனால் அவர்கள் இறை அன்பில் மூழ்கித் திளைப்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கையாளர்கள் நேரான பாதையைப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்ல; மாறாக, எந்த சவால்களைச் சந்திக்க நேரிட்டாலும் அதில் நிலைத்து நிற்பவர்களுமாவர். அவர்கள் தமது வாழ்வின் நோக்கம் இறை திருப்தியைப் பெற்றுக் கொள்வதே என்பதை அறிந்துள்ளனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நம்பிக்கைக் கொண்டவர்கள் இறைவனின் வழியில் பொய்த் தெய்வங்களைப் போன்று தடையை ஏற்படுத்துகின்ற எல்லாவற்றையும் விட்டும் விலகி நிற்பார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்: நாம் எத்தகைய சமூகத்திலும் காலகட்டத்திலும் வாழ்கின்றோம் என்றால், அதில் ஒவ்வொரு திருப்பத்திலும் தூணடுதல்கள் உள்ளன. அவை ஒருவரை பாவத்தின் பக்கம் இட்டுச் செல்கின்றன அல்லது அல்லாஹ்வின் அதிருப்தியைப் பெறும் செயலைச் செய்யத் தூண்டுகின்றன. உண்மையில் தமது நடைமுறை தவறு என்பதைக் கூட மக்கள் உணர்வதில்லை. உதாரணமாக, சிலர் தமது அண்டை அயலாரிடம் நல்ல உறவுகளை வைத்துக் கொள்வதில்லை. அவர்களின் உரிமைகளை நிறைவேற்றத் தவறுகின்றனர். மேலும், ஒருவரை ஏளனப்படுத்துவதும் இழிவுபடுத்துவதும் முற்றிலும் தவறாகும்.

இஜ்திமாக்களில் அல்லது பிற சபைகளில் சில சமயம் காணப்படுகின்ற சமூகத் தீமையாதெனில் பெண்கள் தமக்கு அல்லது தமது குழந்தைகளுக்கு நல்லஓர் இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். ஆனால் மற்றொரு குழந்தை அங்கு வந்தால் அதனை விரட்டுகின்றனர் அல்லது எரிச்சலை வெளிப்படுத்துகின்றனர். மேலும் இவ்வாறும் நடைபெறுகிறது. அதாவது ஒரு தாய் தனது குழந்தைக்குத் தின்பண்டம் தருகிறார். ஆனால் அடுத்து இருக்கும் குழந்தைகளுக்கு எதுவும் கொடுப்பதில்லை. இதனால் இத்தகைய தாய்மார்கள் தமது குழந்தைக்குப் பகிர்ந்து கொடுப்பதன் முன்மாதிரியைக் காட்டத் தவறுவதுடன் மற்ற குழந்தைகளை வெறுங்கையுடன் விட்டு விடுகின்றனர். இவ்வாறு நடந்து கொள்வது தீய நடத்தையின் உச்சமாகும். எப்போதும் நினைவில் வையுங்கள்! நீங்கள் பிறருக்கு கருணை காட்டத் தவறினால் உங்கள் குழந்தை அதனையே உங்களிடமிருந்து கற்றுக்கொள்ளும். அதைப்போன்றே நீங்கள் இனிமையாகவும் அக்கறையுள்ளவர்களாகவும் நடந்து கொண்டால் உங்கள் குழந்தைகளும் இயல்பாகவே அவற்றை உங்களிடமிருந்து கற்றுக் கொள்ளும்....

அல்லாஹ்விற்கு முழுமையாகக் கட்டுப்படாதவரை உண்மையான நம்பிக்கை இருக்கவே முடியாது. நம்முடைய ஜமாத்தைப் பொறுத்தவரை அல்லாஹ்விற்கு முழுமையாகக் கட்டுப்படுதல் என்பது நிஸாமே ஜமாஅத் என்று அழைக்கப்படுகின்ற ஜமாஅத்தின் அமைப்புடன் மரியாதையாக நடந்து கொள்வதைச் சார்ந்ததாகும். நினைவில் கொள்ளுங்கள்! நமது ஜமாஅத்தின் அமைப்பு காலத்தின் கலீஃபாவால் ஏற்படுத்தப்படுகிறது. மேலும் அந்த அமைப்பின் மூலமே பல்வேறு தேசிய ஜமாஅத்துகள் மற்றும் கிளை அமைப்புகளின் பணிகளும் திட்டங்களும் காலத்தின் கலீஃபாவின் அனுமதியின்படி நடைபெற்று வருகின்றன.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத்தின் ஒரு பொறுப்பாளர் சரியான முறையில் பணி செய்யவில்லை அல்லது நடந்து கொள்ளவில்லை என்றால் அது குறித்து அவரது மேலதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். அதை விட்டு விட்டு பொதுவான அல்லது தனிப்பட்ட சபைகளில் பொறுப்பாளருக்கு எதிராக அல்லது ஜமாஅத் அமைப்பிற்கு எதிராகப் பேசுவது அல்லது எவருடன் உங்களுக்குப் பிரச்சனை இருக்குமோ அவருடன் கடினமாக நடந்து கொள்வது இவை எல்லாம் தவறாகும். அது நமது ஜமாஅத்தின் கண்ணியத்திற்கு எதிரானதாகும். இத்தகைய

நடத்தை எந்த நன்மையையும் ஏற்படுத்தாது. மாறாக இதனால் வெறுப்புணர்வே உருவாக்கப்படும்.

“இத்தகைய மக்கள் நாளடைவில் கிலா∴பத்தே அஹ்மதிய்யாவுக்கு எதிராக கேள்விகளையும் ஆட்சேபனைகளையும் எழுப்பத் தொடங்கி விடுகின்றனர். அவர்கள் காலத்தின் கலீ∴பாவின் வழிகாட்டலையும் அறிவுரைகளையும் பின்பற்றத் தவறி விடுகின்றனர். இத்தகைய மக்கள் இறுதியாக மார்க்கத்தை விட்டும் தூரம் சென்று விடுகின்றனர். பின்னர் தமது ஈமானையே இழந்து விடுகின்றனர்.”

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஓர் உண்மையான மனக்குறையை அல்லது கவலையை அசட்டை செய்து விடுவதோ அல்லது மூடிமறைத்து விடுவதோ சரியல்ல. ஆனால், ஒருவர் இதைக் குறித்து விவாதம் செய்யவோ அல்லது மனக்குறைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கவோ கூடாது. மாறாக சரியான வழிமுறையினைப் பின்பற்றி அதனைக் குறித்து தெரிவிக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: நிஸாம் என்பது ஒவ்வொரு தனிநபரையும் சீர்திருத்துவதற்கான அடிப்படையாகும். அதே நேரத்தில் அது முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தி கூட்டமைப்பை பலப்படுத்தவும் பாடுபடுகிறது. இதனை கருத்தில் கொண்டு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஜமாஅத்தின் சபைகளில் பணிகளில் இருப்பவர்களுக்கு நாம் மரியாதை செலுத்த வேண்டும். அவர்கள் கூறுவதை நாம் கேட்க வேண்டும். மேலும் தொழுகையில் நமது வரிசைகளை நேராக வைத்துக் கொள்ள வேண்டும். இந்த எல்லா விஷயங்களும் சேர்ந்துதான் நிஸாமே ஜமாஅத்தை மேம்படுத்துவதற்குக் காரணமாய் அமைகின்றன.

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

பொதுவான ஊடகங்களும் சமூக ஊடகங்களும் மார்க்கத்தை விட்டும் இறை இருப்பின் மீதான நம்பிக்கையை விட்டும் மக்களை விலக்கி வருவதால் இன்றைய சமூகத்தின் நல்லொழுக்கம் பாழ்ப்பட்டு ஆன்மீகம் சீர்குலைந்துள்ளது. பள்ளிக்கூடங்களில் கூட மிகச் சிறு குழந்தைகளுக்குப் பொருத்தமற்ற விஷயங்களும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாத ஒழுக்கமற்ற விஷயங்களைக் குறித்தும் கற்பிக்கப்படுகிறது. அதன் விளைவாக குழந்தைகள் இளம் பருவத்திலிருந்தே அவர்களின் பள்ளிகளாலும் அவர்களின் சமூகத்தாலும் மார்க்க போதனைகளை விட்டு அகற்றப்பட்டு உலக சம்பந்தமான சிந்தனைகளை மட்டுமே பெறுகின்றனர்.

இத்தகைய சூழலில் தமது குழந்தைகளின் மார்க்கப் பயிற்சி விஷயத்தில் பெற்றோர் மீது பெரும் பொறுப்பு உள்ளது. இன்றைய நாட்களில் குழந்தைகளின் கார்ட்டூன்கள் மற்றும் கம்ப்யூட்டர் விளையாட்டுகளிலும் கூட முறையற்ற கதைகளும் கதாபாத்திரங்களும் குழந்தைகளின் அப்பாவித்தனத்தை அபகரித்து விடும் அளவுக்கு இடம்பெறுகின்றன. கார்ட்டூன்களைப் பார்ப்பதில் குழந்தைகள் மிகவும் கவனத்துடனும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். குழந்தைகள் கார்ட்டூன்கள் பார்க்கும் போது பெற்றோரும் கண்டிப்பாக அதனைக் கண்காணித்து வர வேண்டும்.

இத்தகைய நிலையின் நீண்டகால விளைவுகள் மிகவும் அபாயகரமானதாகும். அவை நமது வருங்கால தலைமுறையினரை மார்க்கத்தை விட்டும் நல்லொழுக்கங்களை விட்டும் விலக்கி விடும். எனவே பெற்றோர் கவனத்துடன் இதனைக் கண்காணிக்க வேண்டும். குழந்தைகள் மீதான புறத்தாக்குதல்களுக்கு எதிராக பெற்றோர் தமது வீடுகளில் அல்லாஹ்வின் கட்டளைகளும் சிறந்த நல்லொழுக்கங்களும் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தூய இஸ்லாமிய சூழலை ஏற்படுத்த வேண்டும்.

குழந்தைகள் புத்திசாலிகளாகவும் கூர்ந்து கவனிப்பவர்களாகவும் உள்ளனர். எனவே, பெற்றோர் தமது செயல்களில் எந்த முரண்பாடுகளையும் கொண்டிருக்கக் கூடாது.

அஹ்மதி பெற்றோர் தம்மை மேம்படுத்திக் கொள்வதில் முயற்சி செய்து கொண்டிருப்பது மிக முக்கியமாகும். அப்போதுதான் அவர்கள் தமது குழந்தைகளுக்கு நல்ல முறையில் பயிற்சி அளித்து வழிநடத்த முடியும்.

நான் ஏற்கனவே கூறியபடி, ஜமாஅத்தின் எந்தவொரு பொறுப்பாளரும் உங்கள் மீது குற்றமிழைத்து விட்டால் அல்லது நீங்கள் நினைக்கும்படி சரியாக நடந்து கொள்ளவில்லை என்றால் அவரிடம் நேரடியாகப் பேசுவதன் மூலம் அல்லது அவரது மேலதிகாரியிடம் கொண்டு செல்வதன் மூலம் அதனை நிதானமாக கையாளுங்கள். அப்போதும் உங்களுக்கு திருப்தி ஏற்படவில்லை என்றால் காலத்தின் கலீ∴பாவுக்கு அதனை எழுதுங்கள். ஆனால் ஒருபோதும் உங்கள் குழந்தைகள் முன்னிலையில் இவ்விஷயங்களைக் குறித்துப் பேசாதீர்கள். ஏனெனில் இந்த



விஷயங்கள் குழந்தைகள் மீது மிகத் தீய தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன். கடைசியில் இது அவர்களிடத்தில் மார்க்கத்தின் மீதான வெறுப்பை உருவாக்கி விடுகிறது. பின்னர் அவர்கள் உலகின் பளபளப்புக்கு இரையாகி சமூகத்தின் தீய தாக்கத்தின் கீழ் வந்து விடுகின்றனர்.

உங்கள் குழந்தைகளுடன் தினமும் பேசுங்கள். அவர்களை அல்லாஹ்விற்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கும் அருகில் கொண்டு வரும் விஷயங்களைக் கூறுங்கள். நான் ஏற்கனவே முன்னர் பலமுறை கூறியிருப்பது போன்று அஹ்மதி பெற்றோர் ஆரம்பத்திலிருந்தே தமது குழந்தைகளிடம் நல்ல நட்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் ஏற்படுத்தி விட வேண்டும்.

பெற்றோர் இருவருக்கும் கடமை இருக்கின்றது என்ற போதிலும் அஹ்மதி தாய்மார்கள் தமது குழந்தைகளிடம் ஒரு நேசத்துடன் கூடிய நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு மார்க்கப் போதனைகளை அவர்களிடத்தில் ஊட்டுவது அவர்களின் கடமையாகும். நீங்கள் உங்கள் குழந்தைகளிடம் அவர்கள் உங்களுடன் திறந்த மனதுடன் சுதந்திரமாகப் பேசுவதற்கு ஆர்வமூட்ட வேண்டும். அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறுவது தாய்மார்களின் கடமையாகும்…... தாய்மார்களுக்கு அதற்கான பதில் தெரியவில்லை என்றால் அதனை ஆய்வு செய்து பதில் தரப்பட வேண்டும். பதில் கூறாமல் விட்டு விடக் கூடாது.

இது தொடர்பாக அஹ்மதி இளம்பெண்களும், பெண்களும் தமது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்வதற்கும் தற்கால பிரச்சனைகளைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: நல்லொழுக்க, மார்க்கப் பயிற்சி அளிப்பது குறிப்பாக இந்தக் காலத்தில் மிகப்பெரிய பணியாகும். தாய்மார்கள் இந்தப் பணியில் முன்னணியில் நிற்க வேண்டும்.

நமது முன்னோர்களைக் குறித்த தூய முன்மாதிரிகள் நம்மையும் நமது குழந்தைகளையும் வழிநடத்தவும் நம்மை மேம்படுத்திக் கொள்ள நமக்கு உணர்சியூட்டவும் வேண்டும். அதன் மூலமாக நாம் உண்மையான நம்பிக்கையாளர்களைச் சார்ந்தவர்களாக முடியும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: உண்மையான நம்பிக்கை கொண்டவர்களுக்கான ஒரு எடுத்துக்காட்டு அவர்கள் எப்போதும் உண்மை பேசுபவர்கள் ஆவர். பச்சைப் பொய்களும் பிற சிறிய பொய்களும் முற்றிலும் தவறாகும். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஒரு சஹாபியிடம் பொய்யை விட்டு விடுமாறு கூறினார்கள். அதன் பின்னர் அவர் எப்போதாவது ஏதாவது பாவச்செயலைச் செய்ய நேர்ந்தபோது, அவர் அதனைச் செய்யாமல் நிறுத்திக் கொள்வார். ஏனெனில் அது குறித்து கேட்கப்பட்டால் உண்மையைக் கூறாமல் பொய் கூற வேண்டிய நிலை ஏற்பட்டு விடும் என்று அவர் எண்ணினார். எனவே, உண்மையைக் கூறியதன் மூலம் அவர் உண்மையான நம்பிக்கையாளரின் உயர்ந்த தகுதியை அடைந்து விட்டார்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிகளுக்கிடையிலான தனிப்பட்ட அல்லது குடும்ப




ரீதியிலான பிரச்சனைகள் எனது கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வரப்படுகின்றன. பஞ்சாபி அல்லது உர்து பேசும் பெண்கள் மட்டுமே எனக்கு எழுதுகிறார்கள் என்பதில்லை. மேற்கத்திய நாடுகளில் வளர்க்கப்பட்டு அங்கு கல்வி கற்ற பெண்களும் கூட தமது மாமியார், மாமனார் அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்களைக் குறித்து எனக்குப் புகார் எழுதுகின்றனர். அவர்கள் சில சமயம் நிஸாமே ஜமாஅத்தைக் குறித்தும் முறையீடு செய்கின்றனர். இன்ன பொறுப்பாளர் தனது உறவினருக்கு நெருக்கமானவர். எனவே அவர் நடுநிலையுடன் நடந்து கொள்ளவில்லை. இந்தப் பிரச்சனைகள் விசாரிக்கப்படும்போது இரு தரப்பிலும் மிகைப்படுத்துதலும் பொய்யும் இருப்பது தெரிய வருகிறது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: இரு தரப்புமே உண்மையைக் கைக்கொண்டால் பிரச்சனை நல்ல முறையில் தீர்க்கப்பட்டு விடும். தாருல் கஸாவோ அல்லது ஜமாஅத் அமைப்போ தமது தீர்ப்பைச் சரியாகக் கூற முடியும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். பொய் கூறுதல் மிகப்பெரும் பாவமாகும். அது குடும்பங்களின் அமைதியையும் மகிழ்ச்சியையும் மிக விரைவில் அழித்து விட்டு உங்களது சமூகத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: நாம் எப்போதும் நமது நடத்தையை ஆய்வு செய்து வர வேண்டும். சில பழக்கங்கள் அல்லது குறைபாடுகள் சில குறிப்பிட்ட சமுதாயத்தை அல்லது பகுதியைச் சார்ந்தவையாக உள்ளன என்று எண்ணக் கூடாது.

உண்மையில், சமூக ஊடகங்கள் மற்றும் இன்டெர்நெட் காரணமாக உலகின் ஒரு பகுதியில் காணப்படும் பொருத்தமற்ற பழக்கவழக்கங்களும் ஒழுக்கங்கெட்ட நடைமுறைகளும் மிக விரைவில் எல்லைகளைத் தாண்டி பரவி விடுகின்றன.

ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நம்பிக்கைகொண்டவர்கள் மேற்கொள்ள வேண்டிய மற்றொரு பண்பு பணிவு என்றும் எவர்கள் உண்மையிலேயே தம்மைப் பணிவுக்குணம் கொண்டவர்கள் எனக் கருதுகிறார்களோ அவர்கள் தம்மை அகம்பாவத்தில் பேசுகின்றோமா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஒரு பக்கம் அகம்பாவம், குழப்பத்தையும் அமைதியின்மை -யையும் சமூகத்தில் உருவாக்கி விடுகிறது. அது குழந்தைகளின் தர்பிய்யத் விஷயத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஒரு நம்பிக்கையாளர் சதகா வழங்குவதிலும் இறை வழியில் செலவு செய்வதிலும் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அல்லாஹ்வின் அருளால் பெரும்பாலான அஹ்மதிகள் ஏழைகளுக்கும், தேவையுடையவர்களுக்கும், ஜமாஅத்திற்கு உதவிசெய்வதற்காகவும் தாராளமாக சதகா வழங்குகின்றனர்.

> ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ''நாம் எத்தகைய சமூகத்திலும் காலகட்டத்திலும் வாழ்கின்றோம் என்றால், அதில் ஒவ்வொரு திருப்பத்திலும் தூண்டுதல்கள் உள்ளன. அவை ஒருவரை பாவத்தின் பக்கம் இட்டுச் செல்கின்றன. அல்லது அல்லாஹ்வின் அதிருப்தியைப் பெறும் செயலைச் செய்யத் தூண்டுகின்றன. உண்மையில் தமது நடைமுறை தவறு என்பதைக் கூட மக்கள் உணர்வதில்லை. உதாரணமாக, சிலர் தமது அண்டை அயலாரிடம் நல்ல உறவுகளை வைத்துக் கொள்வதில்லை. அவர்களின் உரிமைகளை நிறைவேற்றத் தவறுகின்றனர். மேலும் ஒருவரை ஏளனப்படுத்துவதும், இழிவுபடுத்து -வதும் முற்றிலும் தவறாகும்.''

தற்போது உலகின் பொருளாதார நிலை மோசமாகிக் கொண்டிருக்கும் நிலையில் மக்களின் பொருளாதாரம் நலிவடைந்து வருவதால் சிலர் தமது தேவைகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று கருதி தமது கொடுக்கும் கைகளை மூடிக் கொள்கின்றனர். இது போன்ற நிலைமைகளில் நாம் நம்மை விட அதிக தேவையுள்ளவர்களை நினைத்துப் பார்த்து முடிந்த வரை அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்…..

மற்றொரு அடிப்படையான இஸ்லாமியக் கட்டளை பர்தாவைப் பற்றியதாகும். இன்று உலகில் இஸ்லாத்தின் எதிரிகளால் இது அதிகமாக விமர்சனம் செய்யப்படுகிறது. இதன் விளைவாக சில முஸ்லிம் பெண்கள் தாம் ஒடுக்கப்படுகிறோம் என்று நினைக்கின்றனர்…. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சமூகத்தில் அமைதியை நிலைநாட்ட பர்தாவின் அவசியத்தைப் பற்றி விளக்கியுள்ளார்கள். மேலும் ஆண்களும் தமது பார்வையைக் கீழ்நோக்கி வைக்க வேண்டும் என்ற கட்டளை திருக்குர்ஆனில் உள்ளது. எனவே ஆண்களுக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது; பெண்கள் தாம் ஒடுக்கப்படுகின்றனர் என்ற கருத்து தவறானதாகும்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 2022 ஜலஸா ஸாலானாவில் ஆற்றிய தமது உரையில் எவ்வாறு பணிபுரியும் அஹ்மதிப் பெண்கள் தமது பணியிடங்களில் பர்தாவைப் பேணி வருகின்றனர் என்பது குறித்து தாம் பேசியதைக் குறிப்பிட்டார்கள். அந்தப் பெண்களை வேலைக்கு அமர்த்தியவர்கள் ஹிஜாபை விட்டும் அவர்களை தடுக்க முனைந்தபோது அஹ்மதிப் பெண்கள் தமது மார்க்கத்தைப் பாதுகாக்கும் விதத்தில் தமது நிலைப்பாட்டை மேற்கொண்டனர். அவர்கள் தமது மார்க்க நம்பிக்கைக்கு எதிரான ஆடைகளை அணிவதை விட தாம் வேலையை இழப்பதற்குத் தயார் என்று கூறினர். இறுதியில் அவர்களை பணி அமர்த்தியவர்கள் அவர்களின் துணிவையம் மார்க்கத்தின் மீதான உறுதியையும் கண்டு பணியின்போது அவர்கள் பர்தாவை மேற்கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கினர்.

எனவே, உலகின் அழுத்தத்திற்கு அடிபணிந்து விடாதீர்கள். அல்லாஹ்வின் கட்டளைகள் எல்லாக் காலத்திற்கும் உரியவை. நாம் அவற்றைப் பின்பற்றினால்தான் நாம் நேரான வாழ்க்கை வாழ்வதுடன் எதிர்கால சந்ததிகளையும் நாம் பாதுகாக்க முடியும்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இணைய தளத்தைப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு கூறினார்கள். மக்கள் சமூக வலைதளங்களில் தம்மைக் குறித்த பதிவுகளை உருவாக்குகின்றனர். அதில் தமது தனிப்பட்ட புகைப்படங்களையும் வீடியோக்களையும் பகிர்ந்து விடுகின்றனர். சிலர் இதனை பொழுதுபோக்கிற்காக செய்யப்படும் ஒரு தீமையற்ற செயல் என நினைக்கலாம். ஆனால் இது போன்ற விஷயங்கள் துரிதமாக நமது கட்டுப்பாட்டை மீறி சமூகத் தீமைகளுக்கும் மனநல பாதிப்புகளுக்கும் இட்டுச் சென்று விடும். களங்கமற்ற பதிவுகளும் கூட தீய விளைவுகளைத் தந்து விடும். சில

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)

# ஒரு சிறிய தப்பெண்ணத்தின் விளைவு



HAZRAT MIRZA GHULAM AHMAD[as]
Promised Messiah, Mahdi

அகந்தையும் விஷமத்தனமும் விரும்பத்தகாத குணங்களாகும். ஒரு சிறிய தவறு எழுபது ஆண்டு கால நற்செயல்களை வீணடித்து விடலாம். ஒரு மலையில் வசித்து வந்த ஓர் இறைநேசரைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. நீண்ட காலமாக அங்கு மழை பெய்திருக்கவில்லை. ஒருநாள் நல்ல மழை பெய்தது. அப்போது அந்த மழை, பாறைகள் மீதும் கற்களின் மீதும் கூட பெய்தது.

அவரது உள்ளத்தில் ஓர் ஆட்சேபனை எழுந்தது. வயல்களுக்கும் தோட்டங்-களுக்கும் அல்லவா மழையின் தேவை உள்ளது! இவ்வாறு பாறைகளின் மீது விழுவதற்குப் பதிலாக இந்த மழை வயல்களின் மீது மட்டும் பெய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் ஓடியது.




இந்த ஆட்சேபனையைக் கேட்ட இறைவன், அவரது இறைநேசத்தை இழக்குமாறு செய்து விட்டான். அவர் மிகவும் வருத்தப்பட்டு மற்றொரு இறை நேசரிடம் இது குறித்து ஆலோசனை கேட்டார். அந்த இறைநேசர் இவரிடம், ‘நீர் ஏன் அவ்வாறு ஆட்சேபனை செய்தீர்? இந்த தவறுக்காகத்தான் நீர் தண்டிக்கப்பட்டுள்ளீர்’ என்றார்.

தண்டனை பெற்ற அந்த இறைநேசர், ஒரு மனிதனை அழைத்தார். தனது கால்களில் ஒரு கயிற்றைக் கட்டி பாறைகளின் மீது தம்மை இழுத்துச் செல்லுமாறு கூறினார். அந்த மனிதன், ‘இப்படி ஒரு செயலை நான் ஏன் செய்ய வேண்டும்?’ என்று கேட்டான். அதற்கு அந்த இறைநேசர், ‘நான் என்ன கூறினேனோ அதைச் செய்’ என்று கூறி விட்டார். எனவே அந்த மனிதன் இந்த இறைநேசரின் கால்களைக் கயிற்றால் கட்டி பாறைகள் மீது அவரை இழுத்துச் சென்றான். அவரது இரு கால்களும் சிராய்ப்புக் காயங்களால் புண்பட்டன. அப்போது இறைவன், ‘போதும் இப்போது நீர் மன்னிக்கப்பட்டீர்’ என்று கூறினான்.

இறைவனுக்கு எதிராக மனிதன் எந்த ஆட்சேபனையும் செய்யக் கூடாது.

மல்ஃபூஸாத்
தொகுதி 6
பக்கம் 57



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

10

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

(பராஹீனே அஹ்மதிய்யா நூல் வெளியீட்டின் தொடராகிய) இந்த வேலைத் திட்டம் இடையில் கைவிடப்பட வேண்டியதாயிற்று. ஏனென்றால் இந்த வேலைத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே இஸ்லாத்திற்கான இன்னொரு வகையில் பணியாற்றுவதற்காக தாம் நியமிக்கப்பட்டிருப்பதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஓர் இறையறிவிப்பைப் பெற்றார்கள். இருந்தபோதிலும் இந்தத் திட்டத்தில் இதுவரை நடைபெற்றிருந்த பணிகளே உலகின் கண்களைத் திறப்பதற்குப் போதுமானவையாக இருந்தன. (பராஹீனே அஹ்மதிய்யா என்ற) இந்த நூல் வெளிவந்தவுடன் நண்பர்களும், எதிரிகளும் ஒருசேர நூலாசிரியர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் பாராட்டினர். இஸ்லாத்தின் எதிரிகள் மத்தியில் இந்நூல் அச்சத்தை ஏற்படுத்தியது. யாரும் பதில் எழுதத் துணியாத அளவுக்கு அவர்களின் வாயை அடைத்தது.

மிகப்பெரிய அளவு தாளில் 600 பக்கங்களைக் கொண்ட இம்மாபெரும் நூலை எழுதும்போது, அதற்கான நிதியைத் திரட்ட வேண்டியதிருந்தது; காதியானிலிருந்து 36 கி.மீ தொலைவில் இருந்த அச்சகத்தாரோடு அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டியதிருந்தது; பிரதி எடுக்கக்கூடிய நபர்களை ஏற்பாடு செய்ய வேண்டியதிருந்தது. கையெழுத்துப் பிரதிகளில் உள்ள பிழைகளைத் திருத்தவேண்டியதிருந்தது; அச்சிடப்பட்டவற்றில் பிழை திருத்தும் பணி இருந்தது; இவை தொடர்பான கடிதத் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டியதிருந்தது; அடிக்கடி பயணங்களை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. இந்த அனைத்துப் பணிகளும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு மிகுந்த சிரமத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தின. ஏனென்றால் சரியான உதவியாளர்கள் இல்லாத காரணத்தால் இந்தப் பணிகளையெல்லாம் அவர்களே முன்னின்று செய்ய வேண்டியதாயிற்று. நூல் வெளியிடும் பணியை நூல் வெளியீட்டாளர் எவரிடமும் ஒப்படைக்க முடியவில்லை. ஏனென்றால் இக்காலத்தைப் போன்று அக்காலத்தில் நூல் வெளியீட்டாளர் எவரும் இருக்கவில்லை. நூலை அச்சிட்ட பின் அதன் விநியோகம், விற்பனை ஆகிய பணிகளையும் அவர்களே நேரடியாகச் செய்ய வேண்டியதிருந்தது. முதலில் 200 பிரதிகள் அச்சிடப்பட்டன. பின்னர் அது 1000 பிரதிகளாக அதிகரிக்கப்பட்டது. இன்றைய மேற்கத்திய உலகில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாகத் தோன்றலாம். ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் ஒரு சதவீதம் மக்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றோராக இருந்த ஒரு நாட்டில் இந்த எண்ணிக்கையிலுள்ள நூல்களை வாங்குவதற்கான முஸ்லிம் வாசகர்களையோ, பிற மத வாசகர்களையோ கண்டுபிடிப்பதே மிகவும் சிரமமான ஒரு வேலையாக இருந்தது. முகவரிகள் சேகரிக்கப்பட்டன; நூலுக்கு விளம்பரம் செய்வதற்காக ஆயிரக்கணக்கான சுற்றறிக்கைகளும், பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. ஆங்கிலத்திலும் சில பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கு அப்போது காதியானில் ஆளே இல்லை. எனவே ஆங்கிலம் தெரிந்த ஒருவரைக் கண்டுபிடிப்பதற்காக லாஹூர், அமிர்தசரஸ் போன்ற இடங்களுக்கு ஆட்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். 1884 ஆம் ஆண்டு நூலின் முதல் நான்கு பாகங்களும் வெளிவந்தவுடன், நூல் வெளிவந்து விட்ட அறிவிப்பைத் தாங்கிய கடிதங்கள் இந்தியா, இங்கிலாந்து, பிற நாடுகளிலுள்ள முக்கியமான கிறித்தவ பிரசாரகர்கள், ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள், இயற்கைவாதிகள், ஆளும் மன்னர்கள், பீர்கள், முஸ்லிம் பெரியவர்கள் போன்ற அனைவருக்கும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த நூலாசிரியர் (ஆகிய ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்கள்) இயேசுவின் பண்புகளான பணிவு, தாழ்மைக்குணம் ஆகியவற்றைக் கொண்டு மனித இனத்தை சீரமைக்க இறைவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது அந்தக் கடிதங்களில் அடங்கியிருந்த செய்தியாக அமைந்திருந்தது. இந்த நோக்கத்திற்காகவே தாம் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் நூலை எழுதி வெளியிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இஸ்லாம் மட்டுமே முழுமையான மார்க்கம். திருக்குர்ஆன் என்பது இறைவனின் வார்த்தையாகும். இதனைப் பரிசோதிக்க

நினைக்கும் எவரும் உண்மையைக் கண்டறிவதற்காக காதியானுக்கு வந்து தம்மோடு ஒரு வருடகாலம் தங்கி இருப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் இந்தக் கடிதத்தைப் பெறுவோர் இந்த விஷயத்தின் மீது கவனம் செலுத்தவில்லை என்றால், அவர்களுடைய கவனமற்ற தன்மையைப் பற்றி நூலின் அடுத்த பாகத்தில் குறிப்பிடப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். ஒருவர் காதியானுக்கு வந்து ஓராண்டு காலம் தங்கியிருந்த பின்னரும், இஸ்லாத்தின் மேன்மையை உணர்த்தக்கூடிய ஒரு தெய்வீக அடையாளத்தைக் கூட காணவில்லை என்றால் தாம் அவருக்கு மாதம் ஒன்றிக்கு ₹200/– வீதம் நஷ்டஈடு தரவும் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தார்கள். இந்த நோக்கத்திற்காக யாராவது ஒருவர் தமது பிரதிநிதியை அனுப்பினால் கூடத் தமக்குச் சம்மதம் என்றும் ஆனால் அந்த பிரதிநிதி கூறும் சாட்சியத்தின் அடிப்படையில் அவரை அனுப்பியவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது அவரது பிரதிநிதி கூறும் இறையடையாளத்தின் உண்மைத் தன்மையை ஒப்புக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்கள்.



இஸ்லாத்தின் உன்னதத் தன்மையை உலகுக்கு உணர்த்து–வதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம்மிடம் இருக்கும் அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள். அதன் விளைவாகச் சில ஆண்டுகளில் நாடு முழுவதும் இருந்த மக்கள் மத்தியில் ஓர் எழுச்சி காணப்பட்டது. ஒவ்வொருவரும் சிந்திக்கத் தொடங்கினார்கள். நாலா திசைகளிலிருந்தும் நன்மக்கள் அவர்களை நாடி வந்து, அவர்களைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டனர். ஒவ்வொரு நாளும் ஆட்களும், விசாரணைகளும் வந்து குவியத் தொடங்கின. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பேச்சில் காணப்பட்ட நேர்மை, உறுதி, ஆற்றல் ஆகியவை அனைவரையும் கவர்ந்தன. இஸ்லாத்தின் எதிரிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்து போனார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நூல் வெளிவருவதற்கு முன்னரே அன்னாரது எதிரிகள் தாம் தக்க பதில் தருவோம் என்று தமது பத்திரிகைகளில் எழுதி இருந்தனர். ஆனால் நூல் வெளிவந்த பொழுது, அதில் அடங்கியிருந்த வாதங்கள் அனைவரையும் வாயடைத்துப் போகச் செய்தன.

## இறை அடையாளங்களின் வெளிப்பாடு

ஷாஹாபூர் என்ற பகுதியின் ஆட்சியாளரின் அழைப்பை ஏற்று, சுவாமி தயானந்த் ராஜபுதனப் பகுதியில் உள்ள மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது 1883 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவருக்கு பதிவுத் தபாலில் ஒரு கடிதம் அனுப்பினார்கள். அதற்கு முன்னரும் அவருக்குப் பல வழிகளில் கடிதங்கள் அனுப்பி இருந்தார்கள். அக்கடிதத்தில் அவர் விரும்பினால் அவருக்கு (அதுவரை வெளிவந்திருந்த மூன்று பாகங்களைக் கொண்ட) பராஹீனே அஹ்மதிய்யாவின் ஒரு பிரதியை அனுப்பி வைப்பதாகக் கூறினார்கள். சுவாமி தயானந்த் எந்தெந்த வழிகளில் விரும்புகின்றாரோ, அந்தந்த வழிகளில் இஸ்லாத்தின் சிறப்பையும், உண்மையையும் நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த நூலில் தாம் குறிப்பிட்டுள்ள ஆதாரங்கள் மட்டுமல்லாமல், தெய்வீக அடையாளங்களையும் காட்டத் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தார்கள். ஆனால் சுவாமி இந்நூலைப் படிக்க ஆர்வம் காட்டவில்லை. விவாதம் நடத்தவோ தெய்வீக அடையாளங்–களைக் காணவோ முன்வரவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கடிதத்திற்குப் பதிலாக அவர் கேலியையும் கிண்டலையுமே வெளிப்படுத்தினார். அவரது முடிவு மிகவும் அண்மையில் இருக்கிறது என்பதை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. 1883 ஆம் ஆண்டு சுவாமி தயானந்த் ஜோத்பூர் மகாராஜாவின் விருந்தினராகத் தங்கியிருந்த பொழுது அவரது முடிவு மிகவும் அருகில் இருப்பதாக ஓர் இறையறிவிப்பை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பெற்றார்கள். எனவே அவர்கள் (காதியான் நகரில் வாழ்ந்த ஆரிய சமாஜ உறுப்பினரான) ஷரம்பத்திடம் தாம் ஓர் ஆன்மீகக் காட்சியில் சுவாமி தயானந்த் இறந்து விட்டதாகக் கண்டதாகக் கூறினார்கள். 1883 –ஆம் ஆண்டு செப்டம்பர் 30 –ஆம் நாள் திடீரென சுவாமி தயானந்த்துக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அவர் அஜ்மீருக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு மிகச்சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டும் அக்டோபர் 30 –ஆம் நாள் அவரது உடல் நிலை கவலைக்கிடமானது. அன்று மாலை 6.00 மணியளவில் அவர் மரணமடைந்தார். அவர் விஷம் வைத்துக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (பார்க்க: லேக்ராம் எழுதிய 'தயானந்தரின் வாழ்க்கை' என்ற உருது நூல்)

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை எதிர்க்கும்படி இஸ்லாத்தின் மிகக் கொடிய எதிரியாக விளங்கிய முன்ஷி இந்தராமன் என்பவரை நாபாவின் இளவரசர் தூண்டி விட்டார். எனவே அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பதிவுத் தபாலில் அனுப்பிய கடிதத்திற்கு நாபாவிலிருந்து பதில் எழுதினார். பிறகு லாஹூரிலிருந்து ஒரு கடிதம் எழுதினார்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது கடிதத்தில் காதியானுக்கு வரும்படி அழைப்பு விடுத்த போதிலும், அவர் தாம் இருக்கும் இடத்திற்கு வரும்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். தாம் காதியான் வருவதாக இருந்தால் அது வாதம் புரிவதற்காகவே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் ₹2400/– ஐ ஒரு வங்கிக் கணக்கில் போட்டு வைக்குமாறும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைக் கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ₹2400/– ஐ ரொக்கமாகக் கையில் கொடுத்து பல முஸ்லிம்களை லாஹூருக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களிடம் ஒரு கடிதமும் கொடுத்து அனுப்பினார்கள். அவர் முன்னரே எழுதியிருந்தபடி ஒரு வாரம் லாஹூரில் தங்கியிருந்திருக்க வேண்டும். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கடிதம் எழுதிய அதே நாளில் லாஹூரை விட்டுப் புறப்பட்டு ஃபரீதுகோட் சென்ற விட்டதாகத் தெரிகிறது. இந்த விஷயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக கடிதத்தைப் பிரசுரமாக வெளியிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. அதன் ஒரு பிரதியை முன்ஷியின் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதென்றும் முடிவாயிற்று. அந்தக் கடிதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது முதல் கடிதத்தில் விடுத்த அழைப்பையும் அதன் நிபந்தனைகளையும் நினைவூட்டி, தாம் அதில் குறிப்பிட்டிருந்த ஒரு விவாதத்திற்கான அழைப்பல்ல என்பதை எடுத்துக்காட்டி இருந்தார்கள். வேண்டுமானால் பிற முஸ்லிம் அறிஞர்களோடு அவர் விவாதம் செய்து கொள்ளலாம் என்றும் கூறியிருந்தார்கள். பிறரால் காட்ட முடியாத தெய்வீக அடையாளங்களைக் காட்டுவதே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முக்கிய ஆர்வமாக இருந்தது. இருந்தபோதிலும் வாதம் தான் நடத்த வேண்டும் என முன்ஷி விரும்பினால் தாம் அதற்கும் தயார்; ஆனால் அது எழுத்து வடிவிலான வாதமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்கள். தமது நூல் வெளிவந்ததன் மூலம் அதற்கான வழிவகைகள் துவங்கி விட்டன. பராஹீனே அஹ்மதிய்யாவில் கூறப்பட்டுள்ள வாதங்களுக்குப் பதில் எழுதி முன்ஷி ₹10,000/– வெகுமதியைப் பெற்றுச் செல்லலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். இந்தக் கடிதம் லாஹூரிலுள்ள சித்தீகி அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1885 –ஆம் ஆண்டு மே 30 –ஆம் நாள் தேதியிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதற்குப் பதிலாக லாஹூரிலுள்ள முஃபீதே ஆம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பிரசுரம் ஒன்றை முன்ஷி வெளியிட்டார். அதில் தாம் விவாதம் நடத்துவதற்காக லாஹூருக்கு வந்து தங்கியிருந்த போதிலும் தாம் கேட்டுக் கொண்டபடி விவாதம் நடத்துவதற்கு முன்வராததாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீது அவர் குறை கூறியிருந்தார். மேலும் விவாதம் நடைபெறுவதாக இருந்தால், அது அமைதியாக நடைபெறத் தேவையான போலீஸ் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

தமது முதல் அழைப்பின் நோக்கத்தையும், முக்கியத்–துவத்தையும் விளக்கி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீண்டும் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். துவங்குவதற்கு முன்பே போலீஸ் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கருதப்படும் விவாதத்தால் தீமையே விளையும்; மேலும் அது காலவிரயமாக அமையும் என்பதையும் எடுத்துக் காட்டியிருந்தார்கள். அதே நேரத்தில் கண்ணியமான முறையில் எழுதப்பட்டுப் பரிமாறப்படும் கட்டுரைகளால் பயன் விளையும் என்றும் கூறியிருந்தார்கள். தாம் இறைவன் புறமிருந்து வந்தவர் என்பதைத் தெரிவிக்கும் இறை அடையாளங்களைக் காண விடுக்கப்பட்ட அழைப்பாக இருப்பதால் பதிவுத் தபாலில் அனுப்பப்படும் இக்கடிதம் கண்ட 20 தினங்களுக்குள் தாம் அதை ஏற்றுக் கொள்கிறாரா இல்லையா என்பதை முன்ஷி ஒரு பிரசுரம் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்




கொண்டார்கள். ஆனால் முன்ஷி இந்த்ராமுக்கு விவாதம் நடத்துவதில் உண்மையான ஆர்வமோ, தமது கொள்கைகளின் மீது உறுதிப்பாடோ இல்லை. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அழைப்பை ஏற்க அவர் முன்வரவில்லை.

தாம் தெய்வீக அடையாளங்களைக் காட்டுவதில் வெற்றி பெற்றால், அதனைக் காண்பவர் முஸ்லிமாக மாற வேண்டும் என்பதை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எப்போதும் வலியுறுத்தி வந்தார்கள். இதுதான், பெரும்பாலும் அறிந்தோ அறியாமலோ அன்னாரது அழைப்பை ஏற்பதிலிருந்து பலரைத் தடுத்தது என்று நான் (நூலாசிரியர்) கருதுகிறேன். தாங்கள் ஏற்கனவே கொண்டிருக்கும் கொள்கைகளை விட்டொழிப்பது பலவீனமான மனிதர்களுக்கு இயலாத காரியமாகும். அப்படிப்பட்ட மீட்சியைப் பெறுவதற்கு ஆன்மீகத் தாகமும், நுண்ணறிவும் தேவை. உலகியல் இருட்டில் உலவும் அற்ப விஷயங்களின் பின்னால் அலையும் துதிபாடிகளுக்கு இது சாத்தியமில்லாத ஒன்றாகும்.

(தொடரும்...)

## உலகக் கோப்பை கிரிக்கெட்

# நஸீர் மாலிக் - பாகிஸ்தானுக்காக முதல் பந்தை வீசிய அஹ்மதி!



நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் 1975 –ல் முதலாவதாக தொடங்கப்பட்டது. 1975 ஜூன் 7 முதல் 21 வரை புரூடென்ஷியல் கோப்பை என்ற பெயரில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஜூன் 7, 1975 –ல் லார்ட்ஸ் மைதானத்தில் பாகிஸ்தான் தனது முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. முதலில் ஆஸ்திரேலியா பேட் செய்தது. 60 ஓவர்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலாவது ஓவரை வீசியவர் வேகப்பந்து வீச்சாளர் நஸீர் மாலிக். இவர் ஓர் அஹ்மதி முஸ்லிம் ஆவார்.

பொறியாளரான நஸீர் மாலிக் சாஹிப் பாகிஸ்தான் தேசிய வங்கியில் பணிபுரிந்து வந்தார். ஒரு பேட்ஸ்மேனாக தமது கிரிக்கெட் வாழ்வை ஆரம்பித்து பின்னர் சிறந்த வேகப் பந்து வீச்சாளராக பரிணமித்தார். இந்த முதல் உலகக் கோப்பைப் போட்டியில் சக பந்து வீச்சாளர்–களைக் காட்டிலும் சிறந்த திறமையை வெளிப்படுத்தினார். (12 ஓவர்கள் – 2 மெயிடன் – 37 ரன்கள் – 2 விக்கெட்) இதே போட்டியில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கானும் பங்கு பெற்றிருந்தார்.

1969 முதல் 1982 வரை இவர் ஆடிய 72 முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் 765 ரன்களை விட்டுக் கொடுத்து 204 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். பாகிஸ்தான் சார்பாக பல்வேறு அணிகளில் இவர் விளையாடியுள்ளார்.

1974 –ல் இங்கிலாந்து சுற்றுப் பயணம் செய்த பாகிஸ்தான் அணியில் இவர் இடம் பெற்றிருந்தார். சிறந்த திறமையை வெளிப்படுத்தி வந்தபோதிலும் அஹ்மதி என்ற காரணத்தினால் சர்வதேச போட்டிகளில் தேசிய அணியில் இடம்பெறுவதிலிருந்து தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டார்.

சர்வதே போட்டிகளைப் பொருத்தவரை இவர் 1975 உலகக் கோப்பையின்போது பாகிஸ்தான், தான் கலந்து கொண்ட மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மட்டுமே இவர் ஆடியுள்ளார். 1990–களில் பல்வேறு முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் நடுவராகச் செயல்பட்டுள்ளார்.

ஜூலை 31, 1999 –ல் இவர் தமது 50 –வது வயதில் மரணம் அடைந்தார். இவரது நல்லடக்கம் ரப்வாவில் நடைபெற்றது.

2018 –ல் டாக்டர் அப்துஸ்ஸலாம் சாஹிபின் பிறந்த நாளின் போது பாகிஸ்தானின் ஒரு மூத்த கிரிக்கெட் வீரர் வெளியிட்ட டிவிட்டர் பதிவில் அன்னாரை முஸ்லிம் என்று குறிப்பிட்டதற்காக கண்டனத்திற்குள்ளானார். இத்தகைய சூழலில் ஓர் அஹ்மதி முஸ்லிம் பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பெறுவது சாத்தியமற்ற ஒன்றேயாகும்.

அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அஹ்மதி முஸ்லிம்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் இடம்பெறுவதை விட்டும் தடுக்கலாம். ஆனால் இந்த உண்மையை அவர்களால் மறைக்கவே முடியாது. அதாவது, உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் பாகிஸ்தானுக்காக வீசப்பட்ட முதல் பந்து அஹ்மதி முஸ்லிமான நஸீர் மாலிக் அவர்களாலே வீசப்பட்டது.

(நன்றி: அல்ஹகம் 08.10.2021)

*(7-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆண்கள் பெண்களின் படங்களைப் பெற்று அதைக் கொண்டு பிளாக்மெயில் செய்கின்றனர்.

எந்த ஒரு சமூக வலைதளத்தில் இணைவதற்கு முன்பாகவும் நீங்கள் மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும். எவர்கள் பர்தாவை எதிர்க்கின்றனரோ அவர்கள் எந்த நாடுகளில் பர்தா பற்றிய கோட்பாடே இல்லையோ அந்த நாடுகளின் நல்லொழுக்கத் தரத்தை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இதன் அடிப்படையில் இன்றைய மேற்கத்தைய நாடுகளின் தரத்தை நாம் ஆய்வு செய்து பார்த்தால் பள்ளிகளிலும் பிற இடங்களிலும் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு அவர்களுக்கு சற்றும் புரியாத அவர்களின் வயதிற்குப் பொருத்தமற்ற விஷயங்களைக் கற்பிக்கின்றனர். களங்கமற்ற சிறு குழந்தைகளிடம் அவர்கள் இன்னும் தயாராகாத நிலையில் அவர்களிடம் பால்தன்மையை ஊட்ட முயற்சிக்கின்றனர். வரலாற்றை நாம் பார்க்கும் போது எங்குமே மிகச் சிறு வயதில் குழந்தைகளுக்கு இது போன்ற விஷயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. அவ்வாறிருக்க, இப்போது மட்டும் பாலியல் விஷயங்களைச் சிறு குழந்தைகளிடம் கலந்தாய்வு செய்வதற்கு தேவை என்ன வந்து விட்டது? இவை எல்லாம் இளைய சமுதாயத்தின் களங்கமற்ற தன்மையை அழித்து விடவும் நீண்டகால தீயவிளைவுகள் உருவாகவுமே வழிகோலும்! வரம்பற்ற சுதந்திரத்தைக் கொண்ட ஒரு சமூகம் நல்லொழுக்க சரிவை சந்திக்கவில்லை என்றால் இஸ்லாமிய பர்தாவை எதிர்ப்பவர்களின் கோட்பாட்டை தாம் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சவால் விட்டுக் கூறுகின்றார்கள். ஆனால் நாம் பார்ப்பதுபோல் இத்தகையசமூகங்களில் ஒழுக்கங்கெட்ட நிலை செழித்தோங்கி இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இளம் வயது ஆண்களும் பெண்களும் சுதந்திரமாகக் கலந்து பழக அனுமதி வழங்கினால் அது மிகவும் ஆபத்தான விளைவுகளைத் தரும் என்றும் அவர்கள் தமது உணர்ச்சி மேலீட்டால் ஆட்கொள்ளப்படுவதற்கான சாத்தியம் உள்ளது என்றும் கூறியுள்ளார்கள். எனவே இஸ்லாமிய பர்தாவைப் பற்றிய போதனை மிகவும் ஞானத்தைக் கொண்டதாகும்......

இஸ்லாமிய போதனைகள் மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே நமது அஹ்மதிப் பெண்களும் பெண்பிள்ளைகளும் தமது ஆடை வெட்கத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவும் குறைந்தபட்சம் பர்தாவின் குறைந்தபட்ச தரத்தைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.


எவர்கள் நேர்மையுடன் தன்னிடம் துஆ செய்வார்களோ மேலும் எவர்களது பிரார்த்தனை வெறும் உதட்டளவில் மட்டும் இல்லையோ அவர்களே வெற்றிக்குரியவர்கள் என்று அல்லாஹ் அறிவித்துள்ளான் என்று ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஒரு நேர்மையான பெண்ணின் துஆக்களுக்குப் பெரும் மதிப்பு உள்ளது. எனவே அஹ்மதிப் பெண்கள் எல்லாவற்றிற்காகவும் மனமார பிரார்த்தித்து வர வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இறுதியில் துஆ செய்தார்கள்.


(அல்ஹகம் வார இதழ், நாள்: 23.09.2022)

## அமெரிக்க பொய்வாதி அலெக்ஸாண்டர் டூயியைக் குறித்து இன்று எவரும் பேசுவதில்லை!




பெரும்பாலான கிறிஸ்தவர்கள் டூயீயை அறியமாட்டார்கள். அறிந்தவர்கள் பேசுவதில்லை! ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆரம்பித்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இன்று 200 -க்கும் அதிகமான நாடுகளில் பரவி விட்டது.

# சீயோனில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்



சீயோனில் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாயில்



ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களுக்கு சீயோன் நகரத்தின் சாவி வழங்கப்பட்டது

**அமெரிக்க பொய்வாதி அலெக்ஸாண்டர் டூயி 'இஸ்லாத்தின் முடிவு சீயோனின் கைகளில் ஏற்படும்' என முன்னறிவித்தார். ஆனால், இன்று சீயோனில் அவரது பெயரைக் கூற எவருமில்லை. மாறாக, இறைவன் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தை சீயோனில் மலரச் செய்தான்.**





அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் ஜூன் 2012 –ல் சீயோன் வந்தபோது அளிக்கப்பட்ட வரவேற்பு




சீயோனில் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பிரச்சார நிலையம்